# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

—பாரதி


ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

மாலை 3 | ஞாயிறு 1-10-39 பிரமாதி௵ புரட்டாசி௴ 15௳ | முத்து 1

## பொருள் அடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| பெரிய நெருக்கடி | ... ... ... ... ... | 2 |
| குறிப்பு | ... ... ... ... ... | 4 |
| போகிற போக்கில் | ... ... ... ... ... | 5 |
| செய்தித் தொடர் | ... ... ... ... ... | 7 |
| எல்லாந் துறந்தார் | ... ... ... ... ... | 8 |
| ஸுபாஷிதம் | ... ... ... ... ... | 9 |
| தக்ஷிண திலகம் | ... வரகவி. திரு. அ. சுப்ரமண்ய பாரதி | 10 |
| ஸ்டாலின் கொள்கை | ... ... த. கிருஷ்ணமூர்த்தி | 14 |
| படமுடியாதினித்துயரம் | ... ... கே. வெங்கடாசலம் | 17 |
| திண்ணைக் கச்சேரி | ... ... ... செல்லம் | 19 |
| வந்தே மாதரம் | ... ... ... ... ரவி | 22 |
| மளிகைக்கடை மாணிக்கம் செட்டி | ... ... ஜி. பாலசுப்ரமண்யம் | 25 |
| சிறுவர் பகுதி | ... ... ... .... வேலு | 28 |
| வலை வீச்சு | ... ... ... ... ... | 30 |
| சினிமாச் சுருள் | ... ... ... ... ... | 31 |


"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



# பெரிய நெருக்கடி

"யுத்தம் எப்படியிருக்கிறது?" என்று கேட்டவண்ணமாகவே இருக்கிறார்கள் பொது ஜனங்கள். அவர்களுக்கு யுத்தத்தைப் பற்றிக் கேட்பதில் ஓர் தனி ஆவல். பாதசாரியாகச் சென்றாலுஞ் சரி, பஸ்ஸில் சென்றாலுஞ் சரி, டிராமில் சென்றாலுஞ் சரி, யுத்தத்தைப்பற்றிய கடைசிச் செய்திகள் ஏதாவதுண்டோ?" என்று முன்பின் அறியாதவர்களெல்லோரும் கேள்விக்குறி போட்டுத் தொந்திரவு செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். இக்கஷ்டத்திற்காகவாவது அரசாங்கம் உத்தரவு போடுவதற்கு முன்பே கிராமாந்திரங்களுக்கு ஓடி விடுவதே நலமெனப்படுகிறது. கிராமப் புனருத்தாரணத்தைப் பற்றிய பத்திரிகை ஓர் கிராமத்திலிருந்தே வெளிவருமானால் எவ்வளவு வேடிக்கையாயிருக்கும்! அப்பேர்ப்பட்ட நெருக்கடி இப்போதைக்கு ஏற்பட அவசியமொன்றுமில்லை.

இப்பொழுது நம் நாட்டில் ஏற்படப்போகும் நெருக்கடி மற்றெல்லா நெருக்கடிகளைக்காட்டிலும் ஒரு படி மேலென்றே கூறவேண்டும். போன மஹாயுத்தத்தில் கூட இவ்வளவு பெரிய நெருக்கடி இருந்ததில்லை. இப்பொழுதோ காங்கிரஸ் அஹிம்சையென்னும் தகர்க்கமுடியாத கவசம் பூண்டுப் பிறரைத் தன் வயப்படுத்தும் சக்தியையும், பொது ஜனங்களின் பரிபூரண ஆதரவையும் பெற்று ஏகாதிபத்தியத்தின் கண்ணை எப்பொழுதும் உறுத்திக் கொண்டிருக்கிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமே, இருக்கும் நெருக்கடியை உத்தேசித்து வெறுப்புற்று இந்தியாவை ஆளும் பொறுப்பை உதறித் தள்ளிவிட்டுச் சென்றால்கூட (அப்படியொன்றும் பெரிய நெருக்கடி நேரிடாது!) கண்ணிமைக்கும் நேரத்தில் கணக்கில்லாத சேனையைச் சேகரிக்கும் வன்மையைத் தற்பொழுது காங்கிரஸ் மஹாசபை அடைந்திருக்கிறது. காங்கிரஸ் முட்டாள்தனமாக மதுவிலக்கு, ஆலயப் பிரவேசம் முதலிய காரியங்களைச் செய்திருக்கலாம்! அதனால் காங்கிரஸின் கீர்த்திக்கு எவ்வித பங்கமும் நேரிடாது. எல்லாவற்றையும் உத்தேசித்தே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் காங்கிரஸினிடம் கொஞ்சம் மரியாதையாகவே நடந்து கொள்ள ஆரம்பித்திருக்கிறது. காந்திஜீ வைஸ்ராயைப் பேட்டிகாண விரும்புவது போக, இப்பொழுது வைஸ்ராயே காந்திஜீக்குப் பேட்டியளிக்க ஆவல் கொண்டிருப்பதிலிருந்து தெரிகிறதல்லவா? காந்தி—வைஸ்ராய் பேட்டிகள், சிம்லா—வொய்ட்ஹால் ஆகாச தந்தியின் பலனோவென்று எண்ணவும் இடமிருக்கிறது.

"ஹிட்லர் ஓர் ஒப்பந்த நாசகாரி" எனக் கர்ஜித்தார் சேம்பர்லின். ஆனால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் மட்டும் பிறருடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களை நாசஞ் செய்யாமல் அதன்படி நடந்து வருகிறதா எனக்கேட்க விரும்புகிறோம். காந்தி—இர்வின் ஒப்பந்தம் இருந்த இடந் தெரியவில்லை. சுலபத்தில் ஏமாற்றி விட்டோம் என்று கொக்கரித்துக் கொண்டு அவ்வொப்பந்தம் இர்வினோடு சென்று விட்டதென இந்தியாவின் மண்டையில் அடித்தது. இதை இந்தியா மறக்க முடியாது. காந்தி—இர்வின் ஒப்பந்தத்தைப் போலவே மற்றோர் மதிப்பில்லா ஒப்பந்தத்தைச்

செய்து கொள்ளவேதான் காந்தியை மறுபடியும் ராஜப் பிரதிநிதி கூப்பிட்டிருக்கின்றார் போலிருக்கிறது.

"ஒரு ஊரில் மூன்று சகோதரர்களாம். மூத்தவர் பரம சாதுவாம். இரண்டாவது பேர்வழி அண்ணனிடம் பயமும் பக்தி விசுவாசமும் கொண்டவர். ஆனால் தம்பி கூறுவதில் நம்பிக்கை கொண்டவர். கடைக்குட்டியோ ஓர் முரடர்; பிடித்த பிடியை விடமாட்டார். 'நம் சொத்தை அவன் ஏன் அனுபவிக்க வேண்டும்? என்ன நாம் பேடிகளா?' என்று பெரியண்ணாவிடம் முறையிடுவார். அவர் சாந்தத்துடன் 'பொறு, பொறு' என்று கூறினால் 'பொறுத்தாய் விட்டது, உன் கையாலாகாவிட்டால் சொல்லிவிடேன், நான் அதஞ் செய்து விடுகிறேன்' என்று சினந்தெழுந்து வீட்டைவிட்டோடி விட்டார்." மேற்கூறிய மாதிரிதான் காந்தி—நேரு—போஸ் சகோதரத்துவம் இருக்கிறது. நேருவுக்குக் காந்தி கூறுவது சில சமயம் பிடிக்கவில்லை. இளமை சீறியெழுகிறது. ஆனால் அனுபவமும் உழைப்பும் கலந்த காந்தீயம் அவரை லயிக்கவைத்து விடுகிறது. ஆனால் போஸோ காந்தீயத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் சென்றவர். சுயராஜ்யத்தை இச்சமயம் பிடுங்கிக் கொள்ள வேண்டுமே தவிர, பிற்பாடு முடியாத காரியம் எனக் கூறுகிறார். இவரையும் சமாளித்துக் கொண்டுதான் காங்கிரஸ் போகவேண்டியிருக்கிறது. இதுவுமோர் பெருத்த நெருக்கடியல்லவா?

ஏகாதிபத்திய தாசர்களான முஸ்லீம் பேர்வழிகள், இந்திய முஸ்லீம்களின் சௌகர்யத்தை நாடுபவர்களைப்போல நடித்துச் சில உபயோகமற்ற நிபந்தனைகளை வகுத்து, "இந் நிபந்தனைகளை ஏகாதிபத்தியம் பூர்த்திசெய்யுமானால் நாங்கள் உதவுகிறோம்" என்று கூறிவிட்டு, ஏகாதிபத்திய அஸ்திவாரத்தை ஆட்டிவிட்டதாக எண்ணி அவ்வகுப்பார்கள் கண்ணை மூடிக்கொண்டு கனுக் காண்கிறார்களாம்.

காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கோ எல்லோராலும் விரும்பப்படும் ஓர் முடிவைக் கொண்டுவரும் பொறுப்பு அதன் தலையில் வீற்றிருக்கிறது. காங்கிரஸிலுள்ள பற்பல வகுப்பாளர்கள் அதை ஆமோதிக்க வேண்டும். எல்லோரையும் விட சுபாஷ் பாபுவைத்தான் முக்கியமாகச் சரிபண்ணவேண்டும்." இதோ ஸத்யாக்கிரகம், அதோ உள்நாட்டுக் கலகம்" என்று பறை சாற்றினால், எட்டாக் கனியைக் கிட்டக்கொணர முடியாது. எல்லோருஞ் சேர்ந்துழைத்துத்தான் ஓர் முடிவுக்கு வரவேண்டும். அம்முடிவு சுபாஷைப் பூர்ணமாகத் திருப்தி செய்யாவிடினும், அவர் அடங்காப் பிடாரியாகத் திரிவதில் பிரயோஜனமில்லை. அதனால் காரியமும் நடக்காது.

காங்கிரஸ் காரியக்கமிட்டி ஏகாதிபத்தியத்தைஎன்ன கேட்டது, ஏகாதிபத்தியம் இப்பொழுதுஎன்ன செய்துகொண்டிருக்கிறது என்றுஇவைகளைப்பற்றி நினைக்கும் போதெல்லாம் நமக்கு ஓர் புறம் வியப்பும் ஓர் புறம் வருத்தமும் ஏற்படுகிறது.

இப்படியிருக்க திடீரென்று ராஜப் பிரதிநிதி, காந்தியை அழைத்தகாரணம் என்னவென்று தெரியவில்லை.

"ஏதன் மத்தியில்" இந்தியாவிற்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து கொடுக்க வேண்டித்தான் காந்திஜீயை ராஜப் பிரதிநிதி அழைத்திருக்கிறார்" என்ற ஓர் சரடு எங்கும் வியாபித்துக்கொண்டு வருகிறது. சரடுகளெல்லாம் உண்மையாகும் காலமிது. ஏன் இந்தச் சரடும் சிலநாள் சென்றால் உண்மையாய் விடும். மற்றொரு காந்தி-லின்லித்கோ என்ற ஒப்பந்தம் சிருஷ்டியாகலாம். ஆனால் அவ்வொப்பந்தம் நிலைத்து நிற்குமா? காரியம் முடிந்த பிறகு மென்னியைப் பிடிக்க ஆரம்பித்துவிட்டால்? இதெல்லாம் என்ன கேள்விகள்? இரகசியம் வெளிக்கு வரட்டும். காரியக் கமிட்டி கூடி ஆலோசித்து முடிவுக்கு வரட்டும். அது எந்த முடிவுக்கு வந்தாலும் அது நம் நாட்டின் நன்மையை உத்தேசித்தே யிருக்கும்.

# குறிப்புகள்

## கதர்

நம் நாட்டில் அந்நியர்களுடைய உதவி கிஞ்சித்தேனுமின்றி இந்தியர்களாலேயே இந்தியப் பொருள்களாலேயே சிருஷ்டிக்கப்படும் பொருள் எது வென்று கேட்டால், நாம் கண்ணை இறுக மூடிக்கொண்டு கதர் என்று பதிலளித்து விடலாம். இப்பதிலுக்குத் தயங்க வேண்டியதில்லை; புஸ்தகத்தைப் புரட்ட வேண்டியதில்லை; பிறர் சொல்லிக்கொடுக்கவும் வேண்டியதில்லை. ஓர் காலத்தில், ஏன் இப்பொழுது கூட அந்நியர்கள் கண்ணை யுறுத்துவது கதர்தான். அந்நியர்களின் அநியாய வியாபாரத்தை அதோகதியாகும்படி செய்த கதர், இந்தியாவின் பரிபூரண சுதந்திரத்திற்கு அடிப்படையாகவுள்ள கதர், தேசத்தொண்டர்களின் வீரத்தொண்டினால் வளர்ந்த கதர். அக் கதர் இன்னும் ஜனங்களுடைய பரிபூரண உதவியைப் பெறவில்லை யென்பதை நோக்க ஆச்சரியமாக இருக்கிறது.

கதராடை ஓர் குடிசைக் கைத் தொழில்! ஏழைக் கிராமங்களிலுள்ள ஏழைகளின் பங்காளன்! கதராடை ஒன்றுதான் லக்ஷக்கணக்கான ஏழைகளுக்குக் கஞ்சி வார்த்துக்கொண்டு வருகிறது. இதை நிரூபிக்க அகில இந்திய சர்க்கா சங்கத்தின் காரியதரிசியான எஸ். ஜி. பாங்கர், கதரின் அபிவிருத்தியை அடியில் கண்டவாறு விபரமாய்க் கூறுகிறார்.

| | | |
|---|---|---|
| சிருஷ்டித்ததின் மதிப்பு | (1937) | ரூ. 30,15,339. |
| | (1938) | ரூ. 54,99,486. |
| சதுர கெஜங்கள் | (1937) | 7,249,877. |
| | (1938) | 12,559,595. |
| விற்பனை | (1937) | ரூ. 44,32,929. |
| | (1938) | ரூ. 54,98,620 |
| உற்பத்தி செய்வதில் உழைத்த கிராமங்கள் | (1937) | 10,280. |
| | (1838) | 13265. |
| நூற்போர்களின் எண்ணிக்கை | 177,499. | 281,880. |
| நெசவாளர்கள் | 13,658. | 18,642. |
| கூலி | ரூ. 17,63,252. | ரூ. 33,13,627. |

மேற்காட்டிய விபரங்களிலிருந்து கதராடைக்கு வருஷத்திற்கு வருஷம் ஆதரவுகள் அதிகப்பட்டுக்கொண்டிருக்கின்றதெனத் தெரிகிறது.

கதர் மற்றெல்லா மாகாணங்களைக் காட்டிலும் நம் தமிழ்நாட்டில் அபரிமிதமாக விருத்தியடைந்திருக்கிறது. இவ்வருஷம் ஏற்பட்ட பஞ்சத்தில் அடிபட்ட ஏழைகள் ராட்டினத்தினுதவியால் வயிறு பிழைக்கவேண்டியிருக்கிறதெனத் தெரிகிறது. தமிழ்நாட்டில் நிர்மாண வேலைக்கு உதவி எதிர்பார்த்தால் கட்டாயம் ஏமாந்தேபோவார்கள். காங்கிரஸ் ஸ்தாபனத்தையே அழிக்கவேண்டுமென்று வரிந்து கட்டிக்கொண்டு கிளம்புகிறார்களே யொழிய தேசத்தை உத்தாரணஞ் செய்யக் கண்டுபிடித்த நல்லவழிகளைச் சீர்படுத்துகிறார்களா? கதர் கட்டிக்கொண்டால்தான் இந்தியாவின் நன்மை தீமைகளைப்பற்றிப் பேசவேண்டுமென்று இருந்தால் இன்று தேதியில் கதர் மிகவும் அபிவிருத்தி யடைந்திருக்குமென்பதில் ஐயமில்லை. கதராடை தரித்துக்கொண்டால் உடனே காங்கிரஸ்காரனாய் விடுவோமென்று நினைப்பது அறியாத்தனம். நோக்கம் ஒருவருக்கிருப்பதுபோல மற்றொருவருக்கிராது. ஒருவர் ஹிட்லரைப்போல யோக்கியன் உலகில் எவனுமில்லையென்றால் அது பலருக்கு நியாயமல்லவென்று வாதஞ்செய்வது பெருமையாகாது. ஆனால் மேடையேறி இந்தியாவைப் பற்றியும், அதிலும் புராதனத் தமிழ்நாட்டைப் பற்றியும் சண்டமாருதமாகப் பிரசங்கஞ் செய்பவன் தமிழ் ஏழை மக்களால் உழைத்த பொருளான கதரை அணியாவிட்டால், அவன், தமிழ் நாட்டையோ அல்லது தமிழர்களையோ அல்லது தமிழையோ பற்றிப் பேசத் தகுதியுடையவன் அல்லவெனத் திண்ணமாகக் கூறலாம்.

ஆகையால் இவ்வாரம் நடக்கும் காந்தி ஜயந்தியின்போது எல்லோரையும் கதர் வாங்கியணியும்படி எல்லா இந்தியத் தலைவர்களும் கூறியிருக்கின்றனர். இந்தியக் கிராமங்கள் செழிக்கவாவது நாம் கதராடை வாங்கியணியவேண்டும். தெற்கே பஞ்சத்தில் அடிபடும் ஏழைகளின் கண்ணீரைத் துடைக்கவாவது நாம் கதராடை வாங்கி யணியவேண்டும்.

வந்தே மாதரம்

## போலந்தின் முடிவு

"வார்ஸா பிடிபட்டது" என்று பர்லின் கூறுகிறது. "வார்ஸா எதிரிகளைத் தாக்குகிறது" என்று வார்ஸாவே கூறுகிறது. இவ்விரண்டிலும் எதை நம்புவது எனச் சிற்சில சமயம் தேசிய வாதிகளிடைச் சந்தேகம் எழும்பும். "வார்ஸாவிலிருந்தே சமாசாரம் கிடைத்திருக்கிறது, அந்நகரம் இன்னும் பிடிபடவில்லை. போலிஷ்காரர்கள் இன்னும்

6-ம் பக்கம் பார்க்க

# போகிற போக்கில்



நண்பர்களே, நான் கொஞ்ச காலமாய்க் கவனித்துக்கொண்டு வருகிறேன். என் நண்பர்களில் சிலர் விரைவில் முன்னேற்ற மடைவதைக் கண்டு களிக்கிறேன்.

"திரிவேணி" என்ற பெயர் கொண்டு பத்து வருஷகாலமாய் நன்றாய் நடந்து வரும் ஓர் உயர்தர ஆங்கில மாதப் பத்திரிகையின் ஆசிரியர் எனக்கு வெகுகால ஸ்நேகிதர். அவர் பத்திரிகைத் தொழிலில் மிகத் தியாகம் செய்து இந்தத் "திரிவேணி"யை நடத்தி வருகிறார். அவருக்கு அவரே எதிர்பாராத ஒரு பாக்யம் சமீபத்தில் அரசியல் துறையில் ஏற்பட்டிருக்கிறது. சென்னை சட்ட சபைக்கு அங்கத்தினராக சமீபத்தில் நடந்த மறு தேர்தலில் அவர் வெற்றியடைந்தார். அது காங்கிரஸுக்கும் வெற்றி. அவருக்கும் வெற்றி.

இவருக்குச் சட்ட சபையில் தேர்தலானதைப்பற்றி நான் கொஞ்சகால முன்னதாகவே எழுதியிருக்க வேண்டியது. இவர் வெற்றியைப் பாராட்டி ஒரு நண்பர் தமது பங்களாவில், அவருக்கு ஒரு விருந்தளித்தார். அதற்கு நானும் போய்ச் சேர்ந்தேன். நண்பர் வீடு எது வென்று கேட்கிறீர்களா? பெயர் சொல்ல மாட்டேன். பங்களாவின் அடையாளம் மாத்திரம் சொல்லுகிறேன். பங்களா வாசலில் சுவரையண்டி—ஒரு விசால ஆலமரம்—நண்பர் மனதும் வட விருக்ஷத்தைப்போல் விசாலமுள்ளது—தாய் மரம் பட்டுப்போய் விட்டாலும், விழுதுகள் கம்பீரமாய்த் தந்தைக்குச் சலிப்பில்லாமல் ஓங்கி உயர்ந்து வளர்ந்து பரவி நிழலிட்டு வருகின்றன.

விருந்து சமயத்தில் எல்லோரும் குதூகலமாயிருந்தோம், ராமகோடீசுவர ராவுக்குக்கூட பால்யமும் களிப்பும் புன்சிரிப்பும் திரும்பிவிட்டன. விருந்து முடிந்தவுடன் இதைப்பற்றி உடனே "போகிற போக்கில்" எழுதிப் பாயஸத்தை ஜீர்ணத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று எண்ணினேன். ஆனால் இதுவரையில் அப்படி எழுத முடியவில்லை.

நானும் ராமகோடீசுவரராவும் இருபது வருஷகாலமாய்ப் பல விஷயங்களில் சேர்ந்து உழைத்திருக்கிறோம். அவரிடம் நான் நெருங்கிப் பழகியிருக்கிறேன். நான் வக்கீல் தொழில் செய்யும் பொழுது அவரைப்போல் ஆசிரியர் தொழில் செய்யவேண்டுமென்று ஆசை கொண்டிருந்ததுண்டு. இப்பொழுது அவருக்கு அரசியல் துறையில் கிடைத்திருக்கும் வெற்றியை நான் மிகவும் பாராட்டுகிறேன். இவரைப் போன்றவர்களைத் தான் நாம் சட்டசபைக்கு அனுப்ப வேண்டும். இவர் விஷயம் தெரிந்தவர்; தைரியஸ்தர்; தேசபக்தர். இலக்கியச் சுவையை ஆண்டு அநுபவித்தவர்; தனிமையாய் நின்று ஆராய்ச்சி செய்வதில் பெருமை பெறக்கூடியவர். ஆனால், எவ்வளவு தூரம் கூட்டத்தில் நின்று தொண்டு செய்ய இவர் மனப்பான்மை ஒத்துழைக்குமென்பதில் எனக்குக் கொஞ்சம் ஐயமுண்டு. சட்டசபையில் பிரதம மந்திரியைப் போல் முன்னின்று வேலை செய்யக் கூடியவர். அல்லது ஸ்ரீ. டி. டி.

கிருஷ்ணமாச்சாரியைப்போல் தனிக்கையாய் எதிரி தரப்பில் நின்று "பௌண்டரி" அடிக்கக் கூடியவர். கூட்டத்தில் நின்று பந்தைப் பொறுக்கிப் போடும் வேலையை இவர் எவ்வளவு தூரம் ரஸிக்கிறாரென்பது பிறகுதான் தெரியும்.

எனக்கு இப்பொழுது ஸந்தோஷம். ஸ்ரீராம கோடீசுவரராவுக்கு, அவர் பத்திரிகைத் தொழிலில் பட்ட பாட்டில் வெளுத்த கருப்பு மயிரெல்லாம் மறுபடியும் அரசியல் மையில் கறுத்துப் போய் விடுமென்று எண்ணுகிறேன். நீண்ட தொண்டு அரசியலில் அவர் செய்வாரென்று நான் நினைக்கிறேன். அதிகாரம் என் கையிலிருந்தால் நான் அவரைக் கல்வி மந்திரியாகச் செய்துவிடுவேன். யுத்த சமயத்தில் நமக்கு இரண்டு விளம்பர மந்திரி வேண்டாமா? ஸ்ரீ. ராமநாதனோடு ஸ்ரீ. வார்க்கியை இணைத்து விடுவேன்.

அரசியல் வெற்றியிலிருந்து நாம் வக்கீல் தொழிலுக்குச் சற்று திரும்புவோம்—ஸ்ரீ ராம கோடியிடமிருந்து ராவ் பகதூர். கே. வி. சேஷையங்காரிடம் திரும்புவோம். அவருக்குச் சென்றவாரத்தில் "இன்கம் டாக்ஸ் அட்வைஸர்" பதவி கிடைத்தது பற்றி எனக்கு அளவில்லாத ஸந்தோஷம். அவர் தேசத்தொண்டில் பழைய பெருச்சாளி, தேசமுன்னேற்றத்தில் மிக்க ஊக்கமுள்ளவர். சரியான வழியில் சமூகத்தில் சீர்திருத்தம் ஏற்படவேண்டுமென்று பல துறைகளில் உழைத்தவர். ரஸிகர், பொறுமையுள்ளவர். பிறரை நகைத்து ஒரு வார்த்தைகூட அவர் பேசி நான் கேள்விப்பட்டதில்லை. இவர் சக்தியையும் செல்வத்தையும் செல்வாக்கையும் தேசத்தொண்டுக்கும் சீர்திருத்தங்களுக்கும் செலுத்துவாரென்பதில் எனக்கு ஐயமேயில்லை. ஸ்ரீ. ராமகோடீசுவர ராவும் ஸ்ரீ சேஷ ஐயங்காரும்மேன் மேலும் வாழ்க!

மணி.

---

4-ம் பக்கத் தொடர்ச்சி

தைர்யத்தைக் கையில் பிடித்துக்கொண்டு சண்டை போடுகிறார்கள்" எனத் தீர்மானத்திற்குவர, மந்திரி சபைகூட்டி, அநேக மூளைகள் ஒன்றோடொன்று முட்டிக் குழப்பிப் பிரச்னையைத் தீர்ப்பார்கள்.

தேசீய வாதிகளும் சரித்திராசிரியர்களும் பிரசங்கிகளும் "சரித்திரம் தன்னை திருப்பிக் கொள்கிறதென்று" கூறுகிறார்கள். அவர்கள் வாக்கு பொய்க்காமல் இருக்கவோ என்னமோ, மறுபடியும் போலந்து மஹாயுத்தத்திற்கு முன்பு இருந்த நிலைமைக்கு வந்துவிட்டது. ஜெர்மனி கல் முள் இல்லாமல் பெருக்கிய பாதைகளில் ரஷ்யா பயமில்லாமல் செல்கின்றது. வார்ஸாவின் இருதயத்தின் வழியே செல்கின்றது இரு நாடுகளின் எல்லைக்கோடு.

இச்சமயம் ஜனநாயக நாடு என்ன செய்யப் போகிறது? "மேற்கெல்லையில் பிரெஞ்சுத் துருப்புகள் முன்னேறுகின்றன" என்பதைத் தவிர வேறு விஷயங்கள் பத்திரிகையில் காணவில்லை. எங்களால் போலந்துக்கு நேரிடையாக உதவிசெய்ய முடியவில்லை" எனக் கண்ணீர்விடுகிறது ஜனநாயகம்! ஆனால் இனிமேல் என்னசெய்யப்போகிறதென்று பார்ப்போம்!

---

# செய்தித் தொடர்

முஸ்லிம் லீக் காரியக் கமிட்டி, இந்தியாவிலிருக்கும் முஸ்லிம்களுக்குச் சில சலுகைகள் கொடுக்கப்பட்டால் பிரிட்டனுடன் யுத்தத்தில் ஒத்துழைப்பதாகக் கூறியிருக்கிறது.

அலகாபாத்தில் ஒரு பெரிய பொதுக் கூட்டத்தில் ஜவஹர்லால் "நாம் யுத்தத்திற்குப் போவதா போகக்கூடாதா என்பதைப்பற்றி யோசிக்க நம் நாடு சுதந்திர நாடாக இருக்கவேண்டுமென்றும், நம்முடைய அனுதாபம் ஹிட்லருடன் இல்லையென்றும், அதே சமயத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு உதவி செய்ய விருப்பமில்லை" யென்றும், கூறினார்.

மைசூரில் ஒத்துழையாமை ஆரம்பித்து நடந்துவருகிறது. ஐந்தாவது சத்தியாக்கிரகத் தலைவர் கைதியானார். மற்றும் பல தொண்டர்கள் கைதியானார்கள்.

சென்னை பிரதம மந்திரி ராஜகோபாலாச்சாரி காந்தி ஜயந்தியின்போது கதர் வாங்கியணியும்படி ஓர் பொதுக் கூட்டத்தில் ஜனங்களைக் கேட்டுக்கொண்டார்.

அடுத்த மாதம் 2-ந்தேதியிலிருந்து 10-ந்தேதிவரையிலும் இந்தியாவெங்கும் காந்தி ஜயந்தி கொண்டாடப்படும்.

இந்திய சேனைகளில் ஆங்கிலேயர்களைச் சேர்க்கப்போவதைத் தடுப்பதுபற்றி ஓர் சட்டம் கொண்டுவரப் போகிறார்களாம்.

அதிக லாபம் வைத்துச் சரக்கு விற்றதினால் பம்பாயில் இரண்டு பெரிய வியாபாரிகள் கைது செய்யப்பட்டனர்.

அக்டோபர் 5, 6 தேதிகளில் நாகபுரியில் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டமொன்று கூடப்போவதாகச் சுபாஷ் சந்திரபோஸ் கூறுகிறார். 7-ந்தேதி வார்தாவில் கூடப்போகும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு இது ரொம்ப ஒத்தாசையாக இருக்குமென்றும் கூறப்படுகிறது.

வைஸ்ராய் காந்தியையும் ஜின்னாவையும் யுத்தத்தைப்பற்றி ஆலோசிக்கக் கூப்பிட்டிருக்கிறார்.

லாகூரில் நடந்த தேசிய முஸ்லிம் கூட்டம் முஸ்லிம் லீகின் யுத்த தீர்மானத்தைக் கண்டனஞ் செய்திருக்கிறது. காங்கிரஸ் செய்யும் தீர்மானந்தான் இந்தியாவிற்குகந்ததெனக் கூறியிருக்கிறது.

ஜூலியஸ் ஸ்ட்ரெட்சர் என்னும் யூதக் கொலைஞன், கோயரிங்கின் உத்திரவின் பேரில் கைது செய்யப்பட்டான்.

ஹிட்லர், போலந்தின்மீது ஜெர்மன் படையெடுத்தது நியாயமென்றும், யுத்தத்திற்குக் காரணம் பிரிட்டிஷூம் பிரான்சும் என்றும் டான்ஸிக்கில் பேசியிருக்கிறார்.

போலிஷ் அரசாங்கத்தார் பிரான்ஸிலிருந்துகொண்டு தேசத்தை ஆளப்போவதாகத் தெரிகிறது.

பொஹீமியாவில் உள்நாட்டுக் கலவரம் நாளுக்கு நாள் அதிகமாகின்றது. ஆயிரக்கணக்கான குடிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அங்கே ஜெர்மன் துருப்புகள் ராஜ்யமாக இருக்கிறது.

உக்ரேனில் குடிகள் ரஷ்யத் துருப்புகளுடன் குரங்குச் சண்டை போடுகின்றார்கள்.

ருமேனிய பிரதம மந்திரி காலினஸ்க்யீ நாஜிக்களால் கொலை செய்யப்பட்டார். கொலையில் சம்பந்தப்பட்டவர்களை அரசாங்கத்தார் சுட்டுக் கொன்றனர்.

ஸீக்பிரட் சுவருக்கு முன்பு பிரஞ்சுத் துருப்புகள் முன்னேறிக்கொண்டிருக்கின்றன.

ரஷ்யா முக்கால்வாசிப் போலந்தை ஆக்கிரமித்துவிட்டது. ஜெர்மனும் ரஷ்யாவும் போலந்தைப் பாகம்போட ஆரம்பித்துவிட்டன.

மேற்கெல்லையில் அநேக ஜெர்மன்படையெடுப்புகளை பிரான்ஸ் முறியடித்தது.

ஜெர்மன் தளகர்த்தனான பேரன் வான் பிரிட்ச் கொல்லப்பட்டான்.


கிழக்கே சைனாவுக்கும் ஜப்பானுக்கும் பலத்த யுத்தம் தொடங்கிவிட்டது.

# எல்லாந் துறந்தார்

ஆதிசங்கரர் ஹிந்துமதத்தைப் பாரத வர்ஷத்தில் செழித்தோங்கப் பாதசாரியாகச் சென்றாரென்றும், ஆங்காங்கு ஏழைகளோ அல்லது பிரபுக்களோ மனமுவந்து செய்த அன்புப் பணியை ஏற்றுக்கொண்டாரென்றும் நாம் கேட்டிருக்கிறோம். அவருக்குப் பிறகு வந்த ஆசார்ய ஸ்வாமிகளெல்லோரும் காலத்தை அநுசரித்தும், அரசர்களின் அநுசரணையினுலும், ரத, கஜ, துரக, பதாதிகளென்கிற நால்வகைச் சேனைகளையும் பெற்றுச் சில மாந்தர்களின் அன்பையும் பக்தியையும் பரிபூரணமாகப் அடைந்திருந்தனர். சிற்சில சமயங்களில் மேற்கூறிய நால்வகைச் சேனைகளையும் ஆங்காங்குள்ள மடங்களின் பொருள்களாலேயே போஷிப்பது வழக்கம். இதனுல் மடத்திற்கு வருமானத்தை விடச் செலவு மிகுதியாகும்.

ஆனுல் ஆசார்ய ஸ்வாமிகள் விடுத்த ஸ்ரீமுகம் ஹிந்துக்களின் பக்தியையும் நன்மதிப்பையும் அதிகப்படுத்திவிட்டது. இத் திருமுகத்தில் கண்டபடி இனிமேல் ஸ்வாமிகள், ரத, கஜ, துரக, பதாதிகளைத் துறந்து கால்நடையாகவே திக்விஜயஞ் செய்வார் பல்லக்கையும் நிராகரித்துவிட்டார். இனிமேல் பாதைகள் கல்லோ முள்ளோ, சேறோ சகுதியோ, ஈசன் கொடுத்த பாதத்தின் உதவியாலேயே எங்கும் செல்வார். பக்திப் பிரசாதத்தை எங்கும் அள்ளி யெறிவார். அவருடைய சாந்த முகத்தை ஜாதிபேதமின்றி இனிமேல் யாவரும் தரிசிக்கலாம். அறியாமையில் அமிழ்ந்துழன்று, அஞ்ஞான மார்க்கத்தில் ஒழுகும் சேரிகளின் உயிர்கள் வரப்பு வழியே செல்லும் ஆச்சார்யாரின் தேஜஸைக் காணும் பாக்கியம் பெறும்.

மேலும் குடந்தைமடத்தின் சொத்துக்களுக்கும் தனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லையென்றும், அம்மடத்தைப் பரிபாலிக்க ஓர் நிர்வாக சபை நியமிக்கப்படுமென்றும், அதன் வருமானத்தைக் கொண்டு இனிமேல் எழைகளுக்கு அன்னமளிக்கப்படுமென்றும் கூறியிருப்பதாகத் தெரிகிறது. ஆங்காங்கு கிடைக்கும் பிக்ஷைகளிலிருந்தும், பாத பூஜைகளிலிருந்தும் வரும் வருமானத்தை ஆங்காங்குள்ள தர்மஸ்தாபனங்களுக்கு அளிக்கப்படுமென்றும் கூறப்படுகிறது. இம் மாறுதல் ஹிந்துமதத்திற்கே ஓர் தனி சோபையைக் கொடுக்கிறது. இந்தியாவில் மறுபடியும் ஹிந்துமதம் புத்துயிர் கொண்டு நிலவும் எனத் திண்ணமாய்க் கூறலாம்.



# ஸுபாஷிதம்

(ரா. ரா)

ராத்ரிர் கமிஷ்யதி பவிஷ்யதி ச ப்ரபாதம்
பாஸ்வானு தேஷ்யதி ஹஸிஷ்யதி பங்கஜஸ்ரீ :
இத்தம் விசிந்தயதி கோசகதே த்விரேபே
ஹா ஹந்த ஹந்த நளினீம் கஜ உஜ்ஜஹார.

(ஓர் கவி.)

"இரவு கழியப் போகிறது. விடியற் காலம் வரப்போகிறது. சூரியன் உதிக்கப் போகிறான். பாஸ்கரனைக்கண்ட பங்கஜமும் மலரப் போகிறாள்." இவ்வாறு தாமரை மலரின் கோசத்தில் அகப்பட்டுக்கொண்ட வண்டானது [கூடிய சீக்கிரம் அதற்கு வரப்போகும் சுதந்திரத்தை எண்ணி] சிந்தித்துக்கொண்டிருக்கும் பொழுது, ஆ! கஷ்டம்! கஷ்டம்! தடாகத்தில் நீர் பருகவந்த ஓர் கஜம், பங்கஜத்தை அடியோடு பிடுங்கி எறிந்தது.

கவி எவ்விதம் சூர்யோதயத்தை வர்ணிக்கிறார் பாருங்கள்! எவ்வளவு அர்த்த புஷ்டி!

## முன் நடந்தது

செங்கதிரோன் செவ்வானத்தில் உறங்கப் போகும் சமயம் ஓர் தேன் வண்டு மலர்களினுள்ள தேனைப் பருகிக்கொண்டிருந்தது. அதே சமயத்தில் சந்திரன் நீலக்கடலினின்றும் குளித்தெழுந்தான். தேன் பருகிச் சென்ற வண்டு மிகுந்த தளங்களோடு கூடிய ஓர் தாமரைப் புஷ்பத்தின் கோசத்தினுள் புகுந்து மது பானம் செய்ய ஆரம்பித்தது. குளிர்ந்த முகத்தையுடைய சந்திரனைக் கண்டதும் நளினி (தாமரை) வெட்கத்தால் முகஞ் சிவந்து, நாணத்துடன் கோசத்தை மூடிக்கொண்டாள். "காதலுக்குக் கண்ணில்லை" யென்பது இதனால் தெரிகிறதல்லவா! உட்புகுந்து அமிர்தம் பருகும் வண்டினைக் கவனித்தாளா? உலகத்தில் இருவர் சுகப்பட வேண்டுமென்றால் ஒருவர் கஷ்டப்பட்டே யாகவேண்டும். இல்லாவிட்டால் சுகத்திற்குப் பெருமை இல்லை! தேன் வண்டு இரவு முழுவதும் தாமரைமலரினுள் சிறைப்பட்டிருக்க வேண்டியிருந்தது. சிறைப்பட்டிருந்த வண்டு தூக்கமின்றி வரப்போகும் 'பகலை' நினைத்து நினைத்து மனப்பால் குடித்திருந்ததைத்தான் கவி அழகாக வருணித்திருக்கிறார்.

கவி காலையிலெழுந்திருந்து இயற்கையன்னை நடத்திக்கொண்டுவரும் பாடசாலைக்குச் செல்கின்றார். ரத்னக்கம்பளம் விரித்தாற்போலப் பயிர்கள் செழித்து வளர்ந்திருக்கும் கழனிக்கப்பால் ஓர் தாமரைத் தடாகம். ஓர் யானை காட்டினின்றும் தடாகத்திற்கு நீர் பருக வருகிறது. நீர் பருகினதுமட்டும் போதாமல் ஆதிமூலத்தைத் தாமரைப் புஷ்பங்களால் அர்ச்சிக்க ஆரம்பித்துவிடுகிறது. "இன்னும் சிறிது நேரத்தில் சூரியன் உதிக்கப்போகிறான். தாமரை மலரப் போகின்றது. முன்போல நாமும் யதேச்சையாகத் திரியலாம்" என்று வண்டு கனவு கண்டுகொண்டிருந்தது. ஆனால் விதியை வெல்ல யாரால் முடியும். தடாகத்தில் பிரவேசித்த கஜம், வண்டு சிறைப்பட்டிருந்த பங்கஜத்தையும் பிடுங்கி அர்ச்சித்ததாம்! வரப்போகும் விடுதலையை எண்ணி யெண்ணி குதூகலித்துக்கொண்டிருக்கும் வண்டின் கதியை நாம் ஊகிக்கலாம்.

இயற்கையில் நடந்த ஓர் சம்பவத்தைக் கவி எவ்வளவு சாமர்த்தியத்துடன் வார்த்தைகளால் சித்தரித்திருக்கின்றாரென்று இந்த சுலோகத்தின் ரஸத்தையறிந்தவர்கள் தெரிந்துகொள்வார்கள்.

# தக்ஷிண திலகம்

(வரகவி-திரு-அ-சுப்ரமண்ய பாரதி)

(சென்றவாரத் தொடர்ச்சி)

இன்று தக்ஷிண திலகம் என்ற தலைப் பெயரெழுதி விஷயத்தை மேலே கவனிக் கையில் —"அவனே இவனே என்று சொல்வதைவிடச் சிவனே சிவனே என்று சொன்னாலும் புண்யமுண்டு—" என்று சொல்கிற பழமொழி ஞாபகத் துக்கு வந்தது. ஏன் இந்த ஞாபகம்? தேசத் துரோகிகளுடைய பெயரை நினைக்கவோ எழுதவோ விதிவசமேற் படாதபடி தேசபக்த சிரோமணியின் பெயரை நினைக்கவும், அவரைப் பற்றி யெழுதவும் சமய மமைய விதி துணை செய்ததல்லவா? "கிளைவ்" செத்த வரு ஷத்தையும் "ஹென்றி" பிறந்த வரு ஷத்தையும் பாடம் பண்ணப் பிறந்த பிறவியைவிட, வேதாத்யயனம் செய்ய வும், சாஸ்திரம் படிக்கவும் பிறந்த பிறவி மேலல்லவா?

இந்த ஞாபகம்—"ஓ! இந்தப் பிறவி இந்த வழியில் சிறிது புண்யம் பெறு கிறது போலும்!" என மகிழ இடங் தந்தது. இந்த மகிழ்ச்சி, உலகவாழ்க்கை யின் பல திறப்பட்ட தொல்லையில் அல்லலுற்றிருந்த மனதுக்குத் தெளி வுண்டாக்கியது. பின் ஐயர் அன்று "ஒளவையின் வாய்க்குச் சர்க்கரைபோட வேணும்—" என்று செய்த கர்ஜனை செவி யில் வெண்கல சப்தம்போல் ஒலிக்கத் தொடங்கியபடியால்— மேலே எழுத வேண்டிய விஷயம் கடலைபோல் படிப் படியாய் ஆற்றின் ஊற்றெனப் பெரு கியது.

ஐயர்—ஒரு விஷயத்தைப் பேசத் தொடங்கினால், தம்முடைய மனம் திருப்தி யடைகிறவரையில் விடாமற் பேசி, சாதிப்பதில் சமர்த்தனை சாணக் யனுவாராதலால் — பணத்தைப்பற்றியே பேசத் தொடங்கி,

"பாடு பட்டுப் பணந்தேட வேண்டும்; தேடிய பணத்தைச் செட்டாய்ச் செல விட்டுச் சேர்க்க வேண்டும். சேர்த்த பின் தனக்கும் தன் நாட்டுக்கும் இதமுண்டா கும் வழியில் கைத்தொழிற் சாலைகளை யோ, வியாபாரச் சாலைகளையோ ஏற் படுத்தி, அவ்வைகளின் மூலம் பணத்தை விர்த்தியாக்க வேண்டும். பணமில்லாத வனால் என்ன செய்ய முடியும்? எப்படிப் பட்ட மேதாவியாயிருந்தாலும் அவன் எண்ணமெல்லாம் வீண் மனோராஜ்ய மாகும்"—என்று கூறி, "ஆகா! என்ன சொல்வேன் நான்! இந்தப் பத்திரிகையை நடத்தத் தொடங்கிய நான் பொருளில் லாத குறையால் பட்டபாடு கொஞ்ச மல்ல! பணக்காரர்கள் பணத்தைப் பண் டைக்காலத்தில் புதைத்து வைத்தார்கள்! இக்காலத்தில் மனைவிக்கு நகைபண்ணிப் போட்டு அழகு பார்ப்பதிலும், பாங்கில் வைத்துப் பூஜிப்பதிலும் அக்கறை செலுத்துகிறார்கள். தர்மமிது அதர்ம மிது என்று தெரியாமல் கண்ணை மூடிக் கொண்டு—சத்திரத்துக்கும் சாவடிக்கும் கோவிலுக்கும் எழுதி வைத்துவிட்டுச் சாகிறார்கள்! இன்னும் நம்முடைய நாட் டில் பணத்தின் மூலம் அடையத்தக்க பெருமைகளை யடைய வழி தெரியாதவர் களே மிகுந்திருக்கிறார்கள். தாங்கள் ஆங் கிலம் படித்துச் சேவகம் செய்ததுபோல் தங்கள் மக்களையும் சேவகம் செய்து தடுமாற வைப்பதிலேயே நாட்ட முடை யவரா யிருக்கின்றனர். இந்த வழியில் மேல் நாட்டாரிடமிருந்து நம்மவர் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் பலவுண்டு. பொதுவாய் எவ் வகுப்பாரும் பூர்வாசாரங்களை யநுஷ் டித்துத் தங்கள் நிலைமையில் திருப்தி கொள்கிறார்கள். அந்தத் திருப்தி முன் னுக்குக் கொண்டுவாராது.

"மேற்றிசைச் செல்வவந்தரின் நோக்கம் மிக விசேஷமானது. மேல் நாட்டு நூலாசிரியரை யெடுத்துக்கொள்வோம். அவர்கள், தங்கள் தேச ஜனங்களுக்கு நல்லறிவை யூட்டி அவர்களது வாழ்க்கையை உயர்த்தித் தாழும் பெருமையடையும் வழியில் பல புத்தகங்களை யெழுதி வெளியிடுவதில் முனைந்து, ஓயாமல் வேலை செய்து பிறநாட்டார் பிரமிக்கத் தக்கபடி புத்தகங்களைப் பிரசுரிக்கிறார்கள். அந்நாட்டினரும் அப் புத்தகங்களை ஆதரிப்பதில் ஊக்கமுடையவர்களா யிருக்கின்றனர். இப்படி பரஸ்பரம் பயனுண்டாகும்படி நடந்துகொள்கிறார்கள். அந்த முறை நம்மவரிடம் நிலைக்கவேண்டுமானால்—பொருளைச் செலவிட்டுப் படிப்பது—உடனே உத்தியோகந் தேடி அடிமைப்படுவது என்கிற கொள்கை அடியோடு ஒழியவேண்டும்! அப்போது தான் பொருளீட்டுந் துறைகள் பலபடியாகச் சிறக்கும்!

"நம் நாட்டில் நம் பூர்விகர்கள், பரோபகாரமாகப் பல நூல்கள் இயற்றவில்லையோ வெனில் இயற்றினர். அவைகள், பாமர ஜனங்களின் அறிவின்மையை யொழிப்பதற்கும் அவர்களுக்கு ஜீவனோபாயங்களைக் கற்பிப்பதற்கும் சாதகமாக ஏற்பட்டனவென்று சொல்லமுடியாதவைகளா யிருக்கின்றன. வித்வான்கள் தங்களுக்குச் சரிசமானமானவர்களின் கோஷ்டிகளில் தங்கள் நூல்கள் அங்கீகரிக்கப்படுவதையே தங்கள் நோக்கம் நிறைவேறியதற்கடையாளமாகக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது! ஆனால் பூர்வ காலத்தில் கல்விமான்களுக்கு மன்னர்களுடைய ஆதரவு பரிபூர்ணமா யிருந்தது! அதனால் வித்வான்கள் உற்சாகமுடையவர்களாய் வீட்டின்பம் நாடுவதற்குரிய நூல்களை இயற்றி வந்தனர். அதனால் விளைந்த நன்மை யாதெனில் தேச பாஷையின் வளம் குறையாமல் பெருகி வந்ததேயாம்.

"நாட்டின் நிலைமை யிப்படி யிருந்தபடியால்— பத்திரிகைகளின் அவசியமும், அறிவின் அபிவிர்த்திக்குரிய நூல்களை யெழுதி வெளிப்படுத்தவேண்டிய அவசியமும் இல்லாமற்போயின! 'கல்யாணத்தின் அந்தஸ்துக்குத் தக்க மேளம்' என்கிற கதையில் விவகாரம் நடைபெற்றது. விவசாயமும் ஏனைய தொழில்களும், அக்காலத்தில் அடைந்திருந்த நிலையை யுணர, இப்போது நமக்குள் வழங்கப் பெறும் பழமொழிகளும் ஜனங்களின் பரம்பரை வழக்கங்களும் சாதகமா யிருக்கின்றனவே யல்லாமல் கல்விமான்கள் அவைகளைப்பற்றித் தங்கள் கருத்துக்களை எழுதிவைத்ததாகத் தெரியவில்லை. மன்னர்கள் நடத்திய போரின் விவரங்களையும் அவர்கள் நடத்திய கீர்த்திக்குரிய போர்வீரச் செயல்களையும் அறிந்துகொள்ளத் தக்க சாதகங்கள் எழுத்தின் மூலமாகக் கிடைப்பதரிதா யிருக்கிறது. ஆலயங்களிலுள்ள கல்வெட்டெழுத்துக்களும் சில குடும்பங்களிலே கிடைக்கும் செப்புப் பட்டயங்களும் அக்கால அரசர்களும் பிரபுக்களும் செய்த தருமங்களை வெளியிடுகின்றன. மேலே எடுத்துக்காட்டிய விஷயங்களை விளக்கக்கூடிய சில நூல்கள் தமிழ்மொழியில் கிடைக்கின்றன. ஆயினும்அவைகள் செய்யுளில், வேறொரு விஷயத்தைப் பிரதானமாகக் கொண்ட நூல்களில் இடையிடையே காணப்படுவனவா யிருக்கின்றன. சாமான்ய ஜனங்கள் அறிந்துகொள்ளக்கூடிய வாசக நடையிலில்லை—"

ஐயர் இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கையில், அவருடைய மாப்பிள்ளை ஜகதீசய்யர் என்பவர்—"பிரிட்டிஷ் ஆட்சியின் பயனாக, இந்தியர்களுக்குப் புதுப் பிறப்பு உண்டாயிருக்கிறது! அவரவர்கள் கிராமமே உலகம் என்பது போய்த் தங்கள் ஜில்லா, தங்கள் மாகாணம் என்று தெரிந்துகொள்ளக்கூடிய சக்தியுண்டா யிருக்கிறது—" என்று சொல்லிக் கொண்டே அவ்விடம் வந்தார்.

ஜகதீசய்யர் என்பவர் பி. ஏ. பி. எல். பாஸ் செய்தவர். ஐயர் அவர்களுடைய மாப்பிள்ளை; ஐயர் அவர்களுடைய குடும்பத்துடனிருந்து வந்தார். 'மாமனார்

வீட்டில் குடும்பத்துடனிருந்து வந்தார்'—என்ற இந்த வாக்கியமே அவர் சம்பாத்ய புருஷர் என்பதை உங்களுக்கு உணர்த்தும்!

அவர் அப்படிப்பட்டவரானாலும் அடிக்கடி மேல் மாடிக்கு வந்து, கூத்திடைக் கோமாளிபோல் இப்படிக் குறுக்கிடாமலிருக்கமாட்டார். அவருக்கு நல்ல மூளை! அந்த மூளை, கஷ்டப்படாமல் கிடைத்து வரும் உணவின் ஊட்டத்தினால், மேக படலத்தில் மறைந்த சந்திரனைப்போலிருந்தாலும் சில சமயங்களில் இப்படிப்பட்ட அரிய பெரிய கருத்தை விளக்கக்கூடிய விஷயத்தை அவருக்குணர்த்தும். அவ்வாறுணர்ந்த வளவில் அவர் அதை மனதுக்குள் வைத்திராமல் இப்படிக் கொட்டி, ஐயர் முன்னிலையில்—கக்கட கக்கடவென்று தாமே சிரித்துவிட்டுப் புது மருமகளைப்போல் மறைந்துவிடுவார்! சில சமயம் அவர் இப்படிப் பேசுவது அசந்தர்ப்பமாக முடியும்! அவ்வாறு முடிகிற சமயத்தில்—ஐயர் அவர்கள் "பாப்பிள்ளை சமர்த்தனேடி—என்று பாடவேண்டியதுதான் பாக்கி—" என்று அவர் தம்மிடமிருந்து மறைந்தவுடன் கூறுவார். சில சமயம் அது அவர் செவியில் விழுவதுமுண்டு.

ஆனால் இன்று வெளிவந்த விஷயம், பிரஸ்தாப விஷயத்துக்கு மிகப்பொருத்தமுடையதாயும் அபூர்வமான கருத்தாயுமிருந்தமையால் ஐயர், "அந்தக் காவேரி ஜலத்துக்கே தனியான சக்தியிருக்கிறது; ஸங்கீதக் கச்சேரி நடக்கையில் ஸ்வாரஸ்யமான இடத்தில் மிருதங்கக்காரன் அந்த ஸ்வாரஸ்யமுணர்ந்து மிருதங்கத்துக்குச் "சாப்பு" கொடுப்பதுபோல், உதிர்த்தான் பார் விஷயத்தை!"—என்று கூறிப் பெருமகிழ்ச்சி யடைந்து அதற்கடையாளமாக எப்போதும்போல் ஒரு கர்ஜனை கர்ஜித்துவிட்டு—'பாரதி, நீ எந்த ஊர்?' என்று கேட்டார்.

"நான் திருச்சி ஜில்லாவில் காவிரி நதிக்கரையின் மேலுள்ள ஒரு சிறு கிராமத்திலிருந்து வந்தவன்—" என்றேன். ஐயர் அவர்கள் உடல் குலுங்கச் சிரமசைத்து இளமுறுவலுடன்—"ஓ! நீ அகண்ட காவேரிப் பேர்வழியா? நல்லது! கவனமாய் வேலை செய்! முன்னுக்கு வருவாய்! காவேரி ஜலங்குடித்து வளர்ந்தவன் சப்பையாவதில்லை! 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி சொல்லும்' என்பதுபோல் காவேரிக்கரைக் காற்றும் கல்யாணி பாடித் தாளம் போடச் சந்துஷ்டியைக் கொடுக்கும்! தவிர சோழ நாட்டு மண்ணுக்கும் மகிமையுண்டு! காசுக்குப் பாடும் உங்கள் கம்பன் வாயில்—அது எப்படி? "தண்ணீருங் காவிரியே"—அப்புறம்?"—என்றார்.

நான்—

"தண்ணீருங் காவிரியே தார் வேந்தன்
[சோழனே
மண்ணாவதுஞ் சோழ மண்டலமே"—

என்று கூறி நிறுத்தினேன். ஐயர் அவர்கள்—பெருமகிழ்ச்சியுடன் "பின்னிரண்டடி?" என்றார்.

—பெண்ணாவாள்
அம்பொற் சிலம்பி யரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு"
என்றேன்.

ஐயர், "ஓ! இந்த இரண்டு அடிகளையும் கூழுக்குப்பாடும் ஒளவை சொன்னாள்—இல்லையா?" என்று மகிழ்ந்து—"நானும் காவேரி ஜலங் குடித்து அந்த மண்ணில் வளர்ந்தவன்தான்! உனக்குத் தெரியுமே!"—என்றவளவில், நான் மெதுவாய்த் "திருவையாறு" என்று ஐயர் அவர்கள் ஜனனமான வூரைச் சொன்னேன்.

ஐயர் அவர்கள்—"என்ன?" என்று உரப்பினார். நான்—"திருவையாறு" என்று கொஞ்சம் பலமாய்ச் சொன்னேன். உடனே ஐய—மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம்—என்னும் மகிமைகளை யுடையது ஐயாறு என்பதை விளக்கும்பாவனையில் முகம்பொலிவுற்று—"நான், பஞ்சநதம்—என்ற அந்த ஊரில் 1856-ம் வருஷத்தில் பிறந்தேன்! பிறகு அங்கேயே படித்தேன்; பள்ளிக்கூட உபாத்தியாயரானேன்! 1878-ம் வருஷம் சென்னை பச்சையப்பன் கலாசாலையில் ஓர் உபாத்

யாயரானேன்! அப்பால்—அதே வருஷத்தில் திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூலுக்குத் தலைமை உபாத்யாயரானேன்!" என்று கூறிக்கொண்டிருக்கையில் "சை—இன்று என்ன இப்படிப் பழங்கதை பேசிவிட்டோமே! காரியமாகவில்லையே! பதினொரு மணியாகப் போகிறது! கடையைக் கட்டு! ஓடு வீட்டுக்கு! சாப்பிட்டு விட்டுத் தயாராயிரு! ஆபீஸில் எழுதிக் கொள்வோம்!" என்றெழுந்தார். நானும் எழுந்தேன்.

இச்சமயம்—அங்கே—தேசிய கவிபாகிய சுப்ரமண்ய பாரதியார் வந்தார். பாரதியார் தேசாபிவிர்த்தியை நாடி மூளையைச் செலவிட்டு உழைப்பவராதலால்—அவருடைய சரீரம், பணக்கொழுப்பில்—இம்மை, மறுமை, புண்ணியம், பாவம் என்கிற உணர்ச்சியின்றி வளர்ந்த சரீரம்போல்—கழுத்தில்லாமலும் இடையில்லாமலும் கண்களில்லாமலும்—பிள்ளையாருடன் பந்தயம் போடத்தக்க தொப்பையில்லாமலும் வளர்ந்து, "இது தங்கமாயிற்றே! எப்படி வளைத்தாலும் எப்படி இழுத்தாலும் அப்படியெல்லாம் நெகிழுமே!" என்று பேசி மகிழும்படி—வீர புருஷனுக்கு அமைய வேண்டிய அளவில் அமைந்திருக்கும். அவருடைய முகமலர்ச்சியும் கண்களின் கருணை விலாசமும் கண்டவர் எவரையும்—சற்று நின்று பார்த்து மனமாகிய சுவரில் அந்த முக மண்டலத்தைச் சித்ர ரூபத்தில் அமைத்துக் கொள்ள ஆர்வ முண்டாக்கும். இவ்வாறே அவர்களுடைய பேச்சும் பிறரை வசப்படுத்தும். அவரிடம் இன்னும் பலவுண்டு சிறப்பித்துப் பேசி மகிழத்தக்க இலக்ஷணங்கள்! எழுதியும் சொல்லியும் முடியா!

ஐயர் அவர்கள் கவிஞரைக் கண்டதும் "கம்பனையும் ஔவையையும் இப்போது தான் நினைத்தோம்! நீரும் வந்தீர்—அவரினத்தவன் நான் என்று! கம்பன் காசுக்குப்பாடினன்! ஔவை அகப்பைக் கூழுக்குப் பாடினாள்! நீர் ஊருக்குப் பாடுகிறீர்! இல்லையா? எங்கே இப்படி? ஆபீஸுக்குப் புறப்பட்டீராக்கும்?" என்றார்.

பாரதியார் மகிழ்ச்சியுடன்—"எல்லாம் இவ்விடத்திய அநுக்ரஹந்தான்!" என்று கூறிப் பணிவுடன் அவரிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து—"நான் போகிறேன். சாவகாசமாய்ப் பார்க்கலாம்!" என்று கைகூப்பி வணங்கி விடை கொண்டார். நாங்களும் பிரிந்தோம்.

(தொடரும்)

---

# ஆசிரியருக்குக் கடிதம்

ஐயா,

"பாரதமணி"யின் இரண்டு முதல் நிறைவுற்று சமீபத்தில் இரண்டாவது ஆண்டு தொடங்கப்போவது வெள்ளிடைமலை. இச்சமயத்தில் என்னைப்போன்ற சிலருக்கு ஒரே ஒரு சந்தேகம் இருக்கத்தான் இருக்கும். "என்ன சந்தேகமய்யா?" என்று வாசகர்கள் என்மேல் கோபம் கொள்ள வேண்டாம். இதோ என் விண்ணப்பத்தை "பாரதமணியில்" சமர்ப்பிக்கிறேன் :—

பொதுஜன அபிப்பிராயங்களை ஆசிரியரும் வாசகர்களும் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் அறிந்துகொள்ள வேண்டுமானால் "ஆசிரியருக்குக் கடிதம்" என்னும் தலைப்பை ஒரு பக்கத்திற்கு ஒதுக்கிவிட வேண்டும். அப்பொழுதுதான் பொது ஜனங்கள் (வாசகர்கள்) தங்கள் அபிப்பிராயங்களை "ஆசிரியருக்குக் கடிதம்" என்னும் தலைப்பின் மூலமாகத் தெரிவித்துக் கொள்ளச் சௌகரியமாய் இருக்கும்."

ஆகவே "பாரதமணி"யில் இனி "ஆசிரியருக்குக் கடிதம்" என்னும் தலைப்பைக் காண்போமாக!

செந்தமிழ் ஓங்குக!!

இங்ஙனம்,

டி. பாலசுப்பிரமணியன்,

தியாகராஜ நகர்

# ஸ்டாலின் கொள்கை

(த. கிருஷ்ணமூர்த்தி)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

ஸ்டாலின், பெர்சின் என்பார் தலைமையில் ரஷ்ய ராணுவ வீரர்களை அனுப்பியிருந்தார். அவர்கள் மற்றவர்களுடன் நெருங்கிப்பழக அனுமதிக்கப் படவில்லை. 1936-ம் ஆண்டு நவம்பரில் ஜோஸ் மியாஜா தலைமையில் ஸ்பெயின் ராணுவம் வந்தது. ஜுவான் நெக்ரின் என்னும் பொக்கிஷ அமைச்சரையும் மியாஜாவையும் தங்கள் கருவிகளாக உபயோகிக்க வேண்டுமென ஸ்டாலின் பிரதிநிதிகளான ஸ்டாலிஸ்கியும் பெர்சினும் தீர்மானித்தார்கள். மியாஜாவும், நெக்ரீனும் பிராங்கோவை ஒழிப்பதில் கருத்துடையவர்களா யிருந்தார்களே ஒழிய ஸ்டாலின் நோக்கத்தில் கருத்து செலுத்துபவர்களாயில்லை. அவர்கள் பொது உடைமைக் காரர்களாயில்லாம விருப்பதால் வெளிநாடுகளுக்கு ஸ்டாலின் தந்திரம் தெரியாதிருக்கச் செய்யவும் சௌகரியமாயிற்று. பிரன்சு பாங்கியிலிருந்த தங்கத்தைப் பிரான்சு தர மறுக்கவே ஸ்டாஷிஸ்கி ஸ்பெயினிலுள்ள மீதித் தங்கத்தைத் தாம் ரஷ்யாவில் வைத்துப் பாதுகாப்பதாகவும், வேண்டும்போது தருவதாகவும் கூறிக் கபிலாரோ அரசாங்கத்தின் சம்மதத்துடன் கொண்டுபோனார் பணம் தங்கள் கையிலிருப்பதனால் மேலும் ஸ்பெயின் அரசாங்கம் தங்கள் சொற்படியே நடக்கவேண்டுமென்பதைக் கண்டு கொண்டார்கள்.

'ஆக்பு'வின் அட்டகாசம் பெருகவே கபாலிரோ அதன் நடவடிக்கையை ஆட்சேபித்தார். எனவே வேண்டுமென்றே ஸ்டாலின் ஆயுதங்களைக் குறைத்தார். கின்பர்மாட்ரிட் முற்றுகைக்குப் பிறகு தூக்கிலிடப்பட்டார். ரஷ்யாவில் ஸ்டாலினுக்கு விரோதமாக விருந்த பொது உடைமைக்காரர்களும் ஒழிக்கப் பட்டார்கள். கடலோனியா பிரதேசமே 'ஆக்பு' ஆட்சிக்கு உட்படவில்லை. ஆகவே காபல்லோராவையும், கடலோனியா அரசாங்கத்தையும் ஒழிப்பதென 'ஆக்பு' தீர்மானித்தது.

கடலோனிய அரசாங்கம் அராஜகர் கையிலிருந்தது. 1937-ம் ஆண்டு மே திருவிழாவின் போது ஸ்டாலின் கூலிகள் 'ஆக்பு'வின் உத்திரவின்படி கலகத்திற்கு எழுந்தார்கள். ஐந்துநாட்கள் பார்சிலோனாவில் குருதி தெருக்களில் ஓடியது. அது காலை ஸ்பானிஷ் பொது உடைமைத் தலைவர் டையாஸ் கடலோனியா அரசாங்கத்தை நீக்க வேண்டுமென்றும் அங்கும் 'ஆக்பு' கிளை ஸ்தாபனங்கள் வேண்டுமெனக் காபல்லோராவைக் கேட்டார். அவர் மறுக்கவே பதவி இழந்தார். 15-ம் தேதி நெக்ரீன் முதலமைச்சர் பதவியை ஏற்றார். அதே சமயத்தில் ஸ்டாலின் விரோதிகளை 'ஆக்பு' அரசாங்கத்திற்கு எதிராகக் கலகம் செய்தார்களெனத் தூக்கிலிட்டது. ஸ்பெயின் தங்கத்தைக் கொண்டுபோன பாங்கு குமாஸ்தாக்கள் சோவியத் நாட்டினின்றும் வெளியேறாமல் தடுக்கப்பட்டார்கள். முடிவாக ஸ்பெயின் அரசாங்கம் ஸ்டாலின் சொற்படி கேட்கக்கூடிய நெக்ரீன் தலைமையிலும், ஸ்பெயின் சேனை மியாஜாவின் தலைமையிலும் வந்தன. ஸ்டாலின் ஆட்கள் மறைவிலிருந்து வேலை செய்து வந்தார்களே தவிர, போர்களத்திலோ அன்றி வெளிப்படையாகவோ தோன்றவில்லை. அச்சமயத்தில் எதிர்பாராத இடத்திலிருந்து ஆபத்து தோன்றியது. ஜப்பான் சைனாவில் போரைத் துவக்கியது. அந்நாடு ரஷ்யாவை ஒழிப்பதில் மிகவும் அக்கரை கொண்டது. தான் மேலும் ஸ்பெயினில்

பலத்தைச் செலவழித்தால் ஜப்பான் தம்மைக் கிழக்கே யிருந்து தாக்கக்கூடு மெனக்கண்டார். ரஷ்யாவில் போரை விரும்பாத ஸ்டாலின் வேறு வகையின்றி ஆமை தலையை இழுத்துக் கொள்வது போன்று ஸ்பெயினின்றும் விலகினர். அதேசமயத்தில் ஈடன் பதவி துறந்தார்; லியோன் புளும் சர்க்காரும் மறைந்தது. ஜனநாயக நாடுகள் பிராங்கோவிடம் நட்புக்கொள்ள ஆசைகாட்டின. ஹிட்லர் முஸோலினி உதவி பிராங்கோவிற்குப் பெருகியது. ஆகவே 1937-கடைசியில் ஸ்டாலின் சின்னம் ஸ்பெயினினின்றும் மறைந்தது. தமது முக்கிய கொள்கை நிறைவேரு விடினும் ஸ்டாலினுக்கு ஸ்பெயின் தங்கம் கிடைத்தது.

II

ஸ்பெயினில் தலையிட்டு வருங்காலையிலேயே பிரிட்டனும், பிரான்சுடனும் ஒப்பந்தம் செய்துகொள்ள முடியாமற் போனாலும், ஜெர்மனியுடனாவது சமாதானம் செய்துகொள்ளலாமென ஸ்டாலின் கருதினர். ஹிட்லரை அச்சுறுத்தவே அதில் தலையிட்டார். 1937-ம் ஆண்டு ஆரம்பத்திலிருந்தே ஹிட்லருடன் பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டது. கிரவிட்ஸ்கி ஹிட்லருக்கு விரோதமாக மேற்கு ஐரோப்பாவில் செய்துவரும் காரியத்தை நிறுத்திக் கொள்ளும்படி உத்தரவிடப்பட்டார். அதே சமயத்தில் ஸ்டாலின் ரஷ்யப் படையில் தமக்கு நம்பிக்கையில்லாதவர்களைத் தீர்த்துவிடுவதென முடிவு கட்டினர்.

1937-ம் ஆண்டு ஜனவரியில் டிராட்ஸ்கியின் சார்பில் கலகம் துவக்கமுயன்றதாகப் பல தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அதுகாலை கைது செய்யப்பட்ட பலரும் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதாக ரஷ்யப் பத்திரிகைகள் கூறின. ராடக் ரஷ்ய சேனுதிபதி துகாஷிவிங்கியின் பெயரையும் விசாரணையில் புகுத்தினர். ஆனல் அவர்மீது எந்தக் குற்றத்தையும் சுமத்தவில்லை. அன்றிருந்து துகாஷிவிங்கியைத் தொலைக்கச் சாட்சியங்கள் தயாரிப்பதில் ஸ்டாலின் ஆட்களை ஏவினர்.

மேற்கில் ஹிட்லரும் கிழக்கில் ஜப்பானும் குமுறும்போது துகாஷிவிங்கியையும் கமார்னிக் போன்ற ராணுவத் தலைவர்களையும் ஒழிப்பதின் பொருளென்ன? ரஷயத் துருப்புகளில் பெரும்பாலும் குடியானவர்களே சேர்ந்துள்ளார்கள். ஸ்டாலின் விளைபொருள் தானியங்களை ஒழுங்குசேகரிக்க திட்டம் போட்டு நிறைவேற்றியதைக் குடியானவர்கள் எதிர்த்தார்கள். ஆகவே தகப்பனையோ, சகோதரனையோ உழவர்களாய்க்கொண்ட சிப்பாய்கள் முணு முணுக்கத் தொடங்கினர்கள். மங்கோலிய எல்லையில் ஜப்பான் அதிக்ரமத்தைத் தடுக்காமல் விட்டுவிடுவதை ரஷ்யப்படையிலுள்ள தலைமை அதிகாரிகள் விரும்பவில்லை. அவ்விரண்டையும் ஸ்டாலினுக்குத் தெரிவித்த போது விளைபொருள் சேமிப்பு அவசியமென்றும் அதனல் எதிர்காலத்தில் ரஷ்யாவின் பலம் பெருகுமென்றும் ஜப்பானை எதிர்ப்பதில் அச்சமயம் நல்லதல்லவென்றும் சோவியத் எத்தகையப் போரிலும் கலக்காமல் நடுநிலைமை வகித்துத் தன் பலத்தைப் பெருக்குவதிலேயே கருத்துடையதாக விருக்கவேண்டுமெனக் கூறிவிட்டார். பலவாண்டுகளாகவேதுகாஷிவிங்கி ரஷ்யப்படைக்கு நவீன ஆயுதங்கள் வேண்டுமென்றும் அதற்குரிய பொருள் தரப்படவேண்டுமென்றும் வற்புறுத்தி வந்தார். அவரின் கோரிக்கையை இதர அதிகாரிகளும் ஆதரித்தார்கள்.

அதற்கிடையில் ஸ்டாலின் நண்பர் கன்டிலாகி ஹிட்லர் ஒப்புக்கொண்டதாக ஓர் ஒப்பந்தத்தைத் தயாரித்து பர்லினிலிருந்துகொண்டு வந்தார். அந்த செய்தி எவருக்கும் தெரியாது. ஆகவே ராணுவத் தலைவர்களை அச்சமயம் நீக்கினலும் ஆபத்தில்லை என அறிந்தார். ஆரும் ஜார்ஜ் மகுடாபிஷேகத்திற்குச் செல்லுவதாக விருந்த துகாஷிவிங்கியின் பிரயாணத்தை ஸடாலின் நிராகரித்தார். எதி

ராளிகளின் ஒற்றுமையைக் கெடுக்க அவர்களுள் மித்திரபேதத்தைக் கிளப்பி விடுவதும் ஒருவித அரசியல் தந்திரம். சென்ற மகா யுத்தத்தின்போது எதிரிகள் தாங்கள் செல்லும் மார்க்கம் வராதிருக்கச் செய்தி கொண்டுபோகும் அள் எதிரிகளின் கையில் தவறுதலாகச் சிக்கும்படி செய்வார்கள். அப்போது அவனிடம் தாங்கள் ஒரு பக்கம் செல்லவிருக்க மற்றொரு பக்கம் செல்லும்படி சிப்பாய்களைக் கட்டளை யிடுவதாக அவனிடம் உத்திரவிருக்கும். அதனைக் காணும் எதிரி கடிதத்தில் கண்டதே உண்மையென நம்பி அதில் கண்டபடி சென்று ஏமாறுவது வழக்கம். அம்மாதிரியே ஜெர்மனி ரஷ்யாவின் பலத்தைக் குலைக்க ரஷ்ய ராணுவ வீரர்கள் ஹிட்லரின் ஆட்கள் என ரகசிய தகவல்களை வெகு எச்சரிக்கையாக வெளியிட்டு வந்தது. அவர்கள் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ளுவதென முடிவு கட்டின ஸ்டாலின் அந்த உளவைப்பெற்று அவர்களை ஒழித்து விடுவதென எண்ணினர்.

பிரான்சில் தஞ்சம் புகுந்துள்ள ஜார் ஆட்சியை விரும்புவோரின் தலைவராக யூஜின் முல்லரிருந்தார். அன்னருக்கும் ஜெர்மன் ராணுவ அதிகாரிகளுக்கும் வெகு நாட்களாகவே நெருங்கிய உறவிருந்து வந்தது. ஹிட்லருக்கும் கிழக்கு ஐரோப்பாவில் நாடு பிடிக்கும் ஆசையிருந்ததால் தாம் தலைமைபதவி அடைந்ததும் அந்த உறவை விடவில்லை. ஆகவே சோவியத் ஆட்சியை ஒழித்து ஜார் ஆட்சியை நிறுவ எண்ணங் கொண்டுள்ள ரஷ்யக் கூட்டத்தினரும், நாடு பிடிக்க ஆசைகொண்டுள்ள ஹிட்லரும் ஒத்துழைத்து வந்தார்கள். முல்லருக்கு உதவியாக ஸ்கோப்லின் என்ற 'ஆக்பு' கூலியிலிருந்து வந்தார். அவர் மீது முல்லர் எவ்வித சந்தேகமும் கொள்ளாமல் தமது ரகசிய வேலைகளுக்கு அவரையே உபயோகித்து வந்தார். எனவே அவருக்கும் ஜெர்மன் 'கெஸ்டபோ' ரகசியப் போலீசுக்கும் தொடர் ஏற்பட்டது. அந்தப் போலீசார் ரஷ்யாவின் பலத்தைக் குறைக்க அதன் ராணுவத் தலைவர்கள் ஹிட்லர் கூலிகளெனத் தயாரித்த சாட்சியங்களை ஸ்கோப்லின் ஸ்டாலினுக்கு அனுப்பி அதனைக்கொண்டு ராணுவத் தலைவர்களை ஒழித்தார். 1937 ஜுன் இறுதியில் அவர்கள் தங்கள் வாழ்நாள் முடிவைக் கண்டார்கள்.

அச்சாட்சியங்களின் உண்மை முல்லர் ஒருவனுக்கே தெரியுமாதலால் அன்னரையும் 1937-ம் ஆண்டு செப்டம்பரில் 'ஆக்பு' ஆட்கள் பாரீசிலிருந்து ரகசியமாகச் சிறைப்படுத்தி ரஷ்யாவுக்குக் கொண்டு போனர்கள். பிறகு அவரைப் பற்றி எத்தகைய தகவலும் வெளிவரவில்லை. 1937-ம் ஆண்டு ஜுலை இறுதியில் ஹிட்லர் சோவியத் ஸ்தானீகரை தமது பர்சுடெஸ்காடன் இல்லத்தில் தனித்து பேட்டி அளித்தார். ஜெர்மனிக்கும், ரஷ்யாவிற்கு மிடையில் எப்போதும் போன்று உறவு இருந்து வரவேண்டுமென்றும் பிறர் விஷயங்களில் தலையிடக் கூடாதென்றும் கூறினர். ஆனல் மூன்று மாதங்களுக்குப் பிறகு அவ்வெண்ணம் பாழடைந்தது. பர்லின் ஸ்தானீகராயிருந்த யூரினவ் திரும்ப அழைக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டார். ஆகவே அம்மூன்று மாதங்களில் ஹிட்லர், ஸ்டாலின் மனம் மாற என்ன நடந்தது? ஸ்தானீகர் அழைக்கப்படுவானேன்!

திரும்பவும் இவ்வாண்டு ஜனவரியில் ஹிட்லர் ரஷ்யாவுடன் நேசம் பாராட்டுவதாகக் காண்பித்துக் கொண்டார். புதிதாக நிறுவப்பட்ட அரசாங்க மன்றத்தில் புத்தாண்டு கொண்டாட்டம் நடந்தபோது மற்ற எல்லா நாட்டு ஸ்தானீகர்களையும் விட்டு ஹிட்லர் புதிதாக பர்லினிக்கு வந்த மெரிகாலாவ் என்ற சோவியத்ஸ்தானீகருடன் தனித்துப் பேசினர். மறுபடியும் உலகம் ஹிட்லர், ஸ்டாலின் ஒன்று சேருவரென எண்ணியது. ஆனல் இந்தத் தடவை நிச்சயமாக உறவு உடன்படிக்கை நிறைவேறுமென எதிர்பார்த்தது. எனினும் அது உடன் நிறைவேற வில்லை.

# “படமுடியா தினித்துயரம்”

(கே. வேங்கடாசலம்)

அன்று ஞாயிற்றுக்கிழமை. ஆபீஸ் விடுமுறை நாள். பலகாரம் சாப்பிட்டு விட்டு ரேழியில் வந்து ‘ஈஸிசேரில்’ சாய்ந்தேன். சிறிது கண்ணயரலாமென்று கண்ணை மூடினேன்.

‘படமுடியா தினித்துயரம்,பட்டதெல்லாம் போதும்” என்று அடித்தொண்டையைப் பிடுங்கிக்கொண்டு உச்சஸ்தாயியில் பாடிக்கொண்டு பண்டாரம் ஒருவன் வாசலுக்கு வந்தான். எனக்குவந்த எரிச்சலில் அவனை அப்படியே சாம்பலாக்கி யிருக்கலாம்! சிவனேன்னு இருந்துவிட்டேன்.

“தாயே, ஒரு பிடி அரிசி, பிள்ளை குட்டி பெருகணும் தாயே” என்று சத்தம் போட்டான்.

எனக்குச் சிரிப்பு வந்தது. நாள் முழுவதும் உழைத்துச் சம்பாதிப்பது நாம், ஆசீர்வாதம் அவளுக்கு! கிடக்கட்டும். இந்தப் பண்டாரப் பரதேசிகளைப் பூண்...

இப்படி யோசிப்பதற்குள் என் மனைவி சமையல் உள்ளிலிருந்து ஒரு பிடி அரிசி எடுத்துவந்து போட்டாள்.

அவன் அரிசியைப் பையில் போட்டுக்கொள்ளும்போது என் மனைவியை ஏறிட்டுப் பார்த்தான்.

“நீ மகராஜியாயிருக்க” என்று வாழ்த்திவிட்டு அடுத்த வீட்டிற்குப் போகாமல் ‘விறுவிறு’ வென்று போய் விட்டான். இது எனக்கு ஆச்சர்யத்தைக் கொடுத்தது. அவனுடைய ஞாபகம் மட்டும் என்னைவிட்டு அகலவில்லை. ஒரு வருடமும் ஓடிவிட்டது.

கோடைகாலம். பட்டணத்தில் வெய்யில் தாங்கமுடியவில்லை. ஆபீஸில் பதினைந்து நாள் லீவு வாங்கிக்கொண்டு என் சொந்தக் கிராமத்திற்குப் போனேன். கிராமத்தின் வடபாரிசத்திலுள்ள மாந்தோப்பில் உட்கார்ந்தால் நாள் போவதே தெரியாது.

ஒரு தினம் நான் வயற்காட்டிற்குச் சென்றேன். வயலைச் சுற்றிப் பார்த்து விட்டுக் கரையிலுள்ள முத்தாலம்மன் கோவில் தென்சுவரின் பக்கம் சாய்ந்து கொண்டு இயற்கையின் காட்சியில் மூழ்கி யிருந்தேன்!

பச்சைப் பசேலென்ற பசுஞ்சமுத்திரம்! அலைகள் மிதந்துகொண்டு வருகின்றன. தென்னை மரத்திலிருந்து குயில் பாடிக்கொண்டிருக்கிறது. ‘குளுகுளு’ என்ற காற்று. அதன் போக்கில் சுகந்தம் கமழுகிறது. சூரியன் மலையடிவாரத்தில் பாதி சென்றுவிட்டான். மஞ்சள் வானம்! மந்தமாருதம்! ஆஹா இயற்கையே கடவுள்! இயற்கை யின்பத்தை நுகராதவனும் மானிட ஜன்மமா?

“ஏன், அண்ணே, ஒரு மாதிரி யிருக்கியே, ஏதாச்சும் கஞ்சிகிஞ்சி குடிச்சியா?” என்ற குரல் உள்ளிருந்து கேட்டதும் எனக்குத் தூக்கி வாரிப்போட்டது! ‘ஏதடா, ஏகாந்தம் என்று வந்தோம். உள்ளே சத்தம் கேட்கிறது! என்று எண்ணினேன். உட்பக்கம் என்ன நடக்கிறது என்பதை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

“என்னத்தைச் சொல்ல, தம்பி! இந்த வாழ்க்கை எனக்குச் சாரமில்லாமல் நிழல் போலாகிவிட்டது”

“அப்படின்னா என்னண்ணே”

“அதுசரி, நான் ஒரு கதை சொல்றேன் கேக்றியா?”

“நீயுமாச்சு, உன் கதையுமாச்சு, பண்டாரத்துக்கு என்ன கதை வேண்டியிருக்கு?”

“இல்லடா தம்பி, நல்ல கதையடா”

“அப்படின்னா சொல்லேன்” எனக்குக் கொஞ்சம் உற்சாகமேற்பட்டது. கதையாவது கேட்கலாமே!

"ஒரு ஊர். அங்கே ஒரு வாலிபப் பையனிருந்தான். அவன் சிறு வயதிலேயே தாயையும் தந்தையையும் இழந்தவன். பாட்டி மட்டும் உண்டு. அவள் அப்பளாம் போட்டோ, முறுக்கு சிடை பண்ணி விற்றோ தன் பேரனை, "படிக்கப் பாட" வைத்தாள். அவன் ஒரு நாள் ஆற்றங் கரைக்கு அதிகாலையில் பல் துலக்கச் சென்றான். அப்பொழுது, ஆற்றில் தண்ணீர் மொண்டுபோக அடுத்த தெரு பிள்ளைவாள் மகள் வந்தாள். அவளுக்கு வயது பதினாறு. அவள் முகத்தில் 'குறும்புக்காரி' என்று எழுதி ஒட்டியது போல் இருக்கும். ஆற்றின் மத்தியில் ஒரு பாறை. பாறைக்குப் பக்கத்தில் ஆழம். பாறைக்குச் சென்று தண்ணீர் மொள்ள இவள் போனாள். அவன் கரையில் நின்றுகொண்டிருந்தான். பாறையிலிருந்து வேஷ்டிக்கு'சோப்'போட்டுவிட்டு எவனோ மீதி சோப்புத்துண்டை அதில் வைத்துவிட்டுப் போயிருந்தான். இவள் அதில் காலை வைத்ததும் 'சரே'லென்று வழுக்கி விழுந்தாள். குடம் 'தட தட' வென்று உருண்டோடியது. கரையில் நின்ற வாலிபன் ஒரே தாவில் பாறைக்குப்போய்த் தண்ணீரில் குதித்தான். அப்பொழுது முழுகி அவள் வெளியே வந்துகொண்டிருந்தாள். உடனே அவன் அவளைத் தூக்கிக்கொண்டு கரைக்குக் கொண்டுவந்து ஆசுவாசப்படுத்தினான். அவன் இதற்கு முன் அவளை எத்தனை தரம் பார்த்திருக்கிறான்? ஆனால் அன்று அவனுக்கு அவளைப் பார்த்தபோது தேகத்தில் 'ஷாக்' அடிப்பதுபோல் தோன்றியது. இருவர் கண்களும் பேசிக் கொண்டன! அன்று முதல் அவர்களிடையே காதல் வளர்ந்துகொண்டு வந்தது. இருவரும் நிலாக்காலங்களில் ஆற்றுப்பக்கம் போய் விளையாடுவார்கள். அவன் இல்லாமல் அவளுக்கு நேரமே போகாது.

"இப்படியிருக்கும்போதுதான் பிள்ளைவாள் தன் மகள் கலியாணத்தைப்பற்றிப் பேச ஆரம்பித்தது. இதை யறிந்த மகள் மிகவும் கவலையடைந்தாள். அவனுக்கும் செய்தி எட்டிவிட்டது. அதுவும் பிள்ளையவர்களால் "ஊதாரி"ப்பட்டம்பெற்ற அவன் அவர் குமாரியை மணக்க நினைப்பது குதிரைக் கொம்புதான்.

"பிள்ளையவர்கள் தன் புதல்வியைப் பட்டணத்திலுள்ள ஒருவருக்குக் கொடுக்கத் தீர்மானித்துவிட்டார். அவர் குமாரிக்கு ஜன்னி பிறந்துவிட்டது. அதே நேரத்தில் அவன் சித்தப்பிரமை பிடித்தவன்போல் ஊரில் குறுக்கும் நெடுக்கும் அலைய ஆரம்பித்தான்.

"கால சக்கரத்தின் வேகத்தில் அவள் கலியாணமாகி பட்டணம் சென்றுவிட்டாள். அவன், கலியாண தினத்தன்று பாட்டியிடம் சந்தைக்குப்போய் வருகிறேன் என்று சொல்லிவிட்டுப்போனவன் எங்கோ பண்டாரமாய் அலைகிறான்" என்று சொல்லிக்கொண்டு வரும்போது அவன் குரல் கம்மியது.

"ஏன் அண்ணே துக்கப்படறே? எல்லாம் நேரிலிருந்து பார்த்தவன் போல் சொல்றியே"

"தம்பி, ஒன்கிட்ட மறைக்க எனக்குப் பிரியமில்லை. நான் இறக்குமுன் அதை யாரிடமும் சொல்லாட்டி என் தேகம் வேவாது! அந்தப் பாவி நான்தான். அவள்—தான் காதலித்த—என்னை மறந்திருப்பாள்.

"ஒரு வருஷத்திற்கு முன் பட்டணத்தில் பிச்சையெடுத்து வரும்போது அவளைப் பார்த்தேன். அவள் என்னைக் கவனித்தாளோ இல்லையோ! நான் பார்த்தேன். என் கண்முன், ஒரு கணம், இறந்தகால இன்பக் கனவுகள் தோன்றி மறைந்தன! ஒருகாலத்தில் ஒளிபெற்றுப் பிரகாசித்த அந்த அழகிய கண்களில் சோபை நிறைந்திருந்தது. உடனே உன்மத்தம் பிடித்தவன்போல் பட்டணத்தை விட்டு இங்கு ஓடிவந்துவிட்டேன். இன்றைக்கு......"என்று சொல்லும்போது பேச முடியாதவனாய் விம்மினான்.

"இன்றைக்கு என்ன?"

(21ம் பக்கம் பார்க்க)

# திண்ணைக் கச்சேரி

(செல்லம்)

எங்களூர் திண்ணைக் கச்சேரி, அந்த அப்பளக் கச்சேரிக்கும் சளைத்துப் போகாது. அதை விவரிக்கப் புகின் அதற்கிடு அதுதான் எனச் சொன்னால் போதுமானது. அது வருஷத்திற்கு 365 நாட்களுக்கு ஒரு முறைதான் நடைபெறும். தினம் காலை ஏழு மணிக்கு ஆரம்பித்தால் மறுநாள் காலை ஏழு மணிக்குத் திரும்ப ஆரம்பித்துவிடும். ஆகையால் முடிவேது ?

எல்லா ஆபீஸ்களுக்கும் விடுமுறை நாட்கள் உண்டு. ஆனால் எங்களூர் திண்ணைக் கச்சேரிக்கு மாத்திரம் விடுமுறையே கிடையாது! அவ்வளவு சிரத்தையாக அந்த ஆபீஸ் நடந்து வந்தது!

உங்கள் ஊரெல்லாம் எவ்வளவோ கச்சேரி நடைபெறும். பாட்டுக் கச்சேரி, சதிர்க்கச்சேரி, கருப்புக்கோட்டைத் தொங்கவிட்டுக்கொண்டு ஆடவர் ஓடும் கோர்ட்டுக் கச்சேரி, ரேடியோ, கிராமபோன் ப்ளேட்கச்சேரி எல்லாம் இதற்கிணையாகமாட்டா!

தெருக்கோடி 'சிடுமூஞ்சி சின்னண்ணு' வீட்டுத் திண்ணையில் கூட்டம் கூடிவிடும். காசு வைத்து ஆடுபவர் பத்துப் பேர், அதைப் பார்க்கக் கூடுபவர் பத்துப்பேர். காலை ஏழுமணிக்குப் படுக்கையை விட்டு எழுந்ததும் பல்லைக்கூடத் துலக்காமல்காபியைக் கூஜா நிறைய நிரப்பி வயிற்றில் விட்டுக் கட்டிவிட்டு வாயில் ஓர் கத்தை புகையிலையை அடக்கிக் கொண்டு "சின்னண்ணு" அவர்கள் சீட்டுக்கட்டை எடுத்துக்கொண்டு தன் சகபாடிகள் வருவதற்குள் தானாகவே பிறர் உதவி இல்லாமல் ஆடக்கூடிய "பிஸ்க்" என்னும் ஆட்டத்தை ஆரம்பிப்பார்.

அதற்குள் "சூதாடி சுப்பன்" கையில் பொடிடப்பி, இடுப்பில் பணமுடிப்புடன் தரிசன மளிப்பான். இருவரும் 'அவுட்' அல்லது 12—6 ஆட்டம் பிடி ஒன்றுக்கு ரூபாய் ஒன்றுமுதல் ஆரம்பித்துக் கையிலிருந்த பண முடிப்பு கரைந்த பிறகு 'பொடி டப்பி,' 'டர்கிஷ் டவல்' முதலான சாமான்களையும் இழந்துவிட்டு அரை வேஷ்டியைக் கூட மறுநாள் தருவதாக ஏலம் கூறியாகிவிடும்.

இந்த சமயத்தில் நமது "ரங்கு பர்லா ராஜம்" சேவை சாதிப்பார். அவர் ரங்கு பர்லாவில் மிகவும் கைதேர்ந்தவர். சீட்டாட்டத்தில் அரை வேஷ்டியைக் கூட ஜயித்துவிடும் நமது "சின்னண்ணு"வுக்குக்கூட இவனிடம் கொஞ்சம் நடுக்கம்தான். மூவரும் "ரங்" ஆட ஆரம்பிப்பார்கள். "சூதாடி சுப்பன்" பாடு அதோகதிதான்.

"டேய்! ராஜம்! இன்றைய தினம் என்ன விசேஷம்? வெகு ஜோராய் வருகிறாயே. சகதர்மிணி யிடம் ஒன்றும் வாட்டு இல்லையோ?" என்று சின்னண்ணு கேட்டார்.

ராஜம் எங்களூரில் பெரிய மைனர். அவன் வார்த்தைகளும் நடவடிக்கைகளும் தனி ரகமாக விருக்கும். ராஜம் பெரிய உபன்யாசம் செய்ய ஆரம்பித்தான். "சகதர்மிணியாவது, மண்ணாங்கட்டியாவது. தரித்திரங்கள்! பொழுது விடிந்தால் அதில்லை, இதில்லை, வீட்டை கவனிக்கவில்லை, குழந்தைக்கு ஜுரம், கன்றுக்குட்டிக்கு மாந்தம். எருமை மாட்டுக்கு வயிற்றுக்கடுப்பு, எனக்குத் தலைவலியென, பிராலம் வைத்து பிலாக்கணம் பாட ஆரம்பித்துவிட்டாளானால் பிறகு கதிமோக்ஷமே கிடையாது! சோற்றுவாயில் மண்ணுதான்! சேசே! மனுஷன் கல்யாணம் செய்துகொள்ளலாமோ, ஏழுசென்மத்திற்கு வேண்டாம்" எனக் கூறித் தன் பிரசங்கத்தை முடித்தான்.

"சரியாய் போச்சு! குதூகலத்திற்குக் காரணம் என்னவென்ருல் குப்பைத் தொட்டியைப்பற்றி பேசுகிருயே?" என்ருன் குப்பன்.

"அதாண்டா! அந்த சங்குவைத் தெரியுமா? முந்திரித் தோப்புச் சண்டையில் நான் சாக்ஷி சொன்னதற்காக நூறு ரூபாய் தருவதாகச் சொல்லியிருந்தான். நானும் ஆறு மாதமாய்க் கேட்டுப் பார்த்தேன். தரும் வழியைக் காணேம். கோடி வீட்டுக் காமாக்ஷியின் ஓர் விவகாரத்தில் பயலை மாட்டிவிட்டேன். இன்று காலை நூறு ரூபாய் நோட்டு ஜம்மென்றுகையில் விழுந்துவிட்டது. இதோ பார்"—எனக் காண்பித்தான். சின்னண்ணுவும் சுப்பனும் அதைப் பேராசையுடன் பார்த்தனர்.

அச்சமயம் "பிரிஜ்"பஞ்சநதம் எழுந்தருளினுர். அவர் திருக்கோலம் தனி சோபையாகவிருக்கும். ஸில்க் ஷர்ட், வண்ணுன் சுமைபோல் ஓர் டர்கிஷ் டவல் தோளில் தொங்கும். வாய் கொப்பளித்து அநேக வருஷங்கள் ஆகியிருக்கும் போல் தோன்றக்கூடிய காவி யேறிய பல்! இந்த திவ்ய அலங்காரங்கள் அவனுடைய ரிஜிஸ்டர் மார்க்குகள்! புளுகில் அவன் ராஜத்திற்கும் மேல்பட்டவன். பெரிய மனுஷன் பேரனுகையால் அவனுடைய வார்த்தைகளுக்குத் திண்ணைக் கச்சேரியில் மிக்க மதிப்புண்டு. அவனைக் கண்டதும் ராஜம் "ஏன் ஸ்வாமி! ராத்திரி ரொம்ப விசேஷமோ? எங்கே இவ்வளவு நேரமாய்க் காணேம்" என்ருன்.

"இன்று கொஞ்சம் "பிஸினஸ்"இருந்தது. சும்மா வீண் போது போக்க முடியுமா?" என்ருன் பஞ்சநதம்.

"ஓஹோ! ரொம்ப "ஹெவி ஓர்க்கோ" அது என்னமோ? எங்களுக்கு சொல்லக் கூடாதா"என்ருன் ராஜம்.

வாயில் சில அக்ஷரமும் நிஜம் வராத பஞ்சநதத்தையும் சிறிது யோசிக்கும்படி செய்துவிட்டது ராஜத்தின் கேள்வி! ஆனுல் இதற்கெல்லாம் சளைத்துப் போகும் ஆசாமி பஞ்சநதமல்ல.

"நமது தாஸி தங்கத்தைத் தெரியாதா? அவளை டாக்கிக்கு வெகுகாலமாய்க் கூப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். அவள் போகச் சம்மதிக்கவில்லை. எனக்குத் தெரிந்த பெரிய மனிதர் ஒருவர் அதை எப்படியாவது 'ஸெடில்'பண்ணித் தரவேண்டுமென மிகவும் கேட்டுக்கொண்டிருந்தார். நான் போனுல் கூட காரியம் நடக்காமலிருக்குமா? இன்று போய் முடித்து வந்துவிட்டேன்" என ஓர் பெரிய கோட்டை விட்டான்.

எல்லோரும் எந்த டாக்கி? என்ன கதை? என ஆவலுடன் கேட்க ஆரம்பித்தார்கள்.

"அடடா! பெரிய பிரகஸ்பதியாகவல்லவோ இருக்கிறீர்கள். இப்பொழுது தான் அவள் டாக்கியில் நடிப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிருள்! பணம் திகைந்து தானே மற்றது முடிவாகவேண்டும்"என அன்றைய கதாசிரவணத்தை செய்து முடித்தான். நால்வரும் "பிரிஜ்" ஆடலானுர்கள்.

பாதி ஆடிக்கொண்டிருக்கையில் "கழுதை கணேசன்" "காயாத கானகத்தே" என்று பெரிதாக ஆலாபனம் அபஸ்வரமாகச் செய்துகொண்டு அவ்விடத்தை அலங்கரித்தான், "என்னடா! கணேசா! நீ இல்லாமல் ஆட்டமே சுகப்படல்லேடா! உனக்குப் பேர் வைத்தார்களே. அடடா! என்ன பொருத்தமான பெயர்! என்ன சுகமான சாரீரம்! இதைப் பாடிய பாகவதர்கூட உன்னிடம் பிச்சை வாங்க வேண்டியதான்!" என ராஜம் கோட்டா பண்ணினுன். மற்றவர்கள் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

"சொல்வ தெளிது, செய்வதரிது" என்பார்கள். எங்கே பாடுங்களேன் பார்ப்போம்! ஏதோ அவாளவாளுக்குத் தெரிந்தது. இதுவரையில் என்னென்ன ஆடினீர்கள். நமக்கு ஒரு கை கிடையாதா?" என்ருன் கணேசன்.

எல்லோரும் ஆட்டத்தைக் கலைத்து. 'Ass' ஆடலானுர்கள், ராஜம் திரும்பவும்

அரட்டைக்கு ஆரம்பித்தான். "ஏய்! கணேசா! மேலக் கோடியில் யாரோ குடி வந்திருக்கிறாளாமே. நீ கூட அந்தப் பக்கத்தில் அடிக்கடி காணப்படுவதாக யாரோ சொன்னார்கள். அங்கு என்ன விசேஷம்? எனக்குச்சொல்லக்கூடாதா?"

"ரொம்ப அழகாகப் பேசுகிறாய். புலிக் குத்தன் காடு பிறர் காடு கிடையாதாம். அந்த மாதிரி உங்களுக்கு எது பேசலாம் கூடாது என்ற பாகுபாடு கூட இல்லாமல் போயவிட்டது! அங்கு குடிவந்திருப்பது என் அத்தைபெண்ணும் அவள் கணவனும்தான்! அவள் ரொம்ப நன்றாகப் பாடுவாள்! எனக்கும் கொஞ்சம் பாட்டுப் பித்து உண்டு. நான் போய்க் கேட்டுவிட்டு வருவேன். இதற்கு இவ்வளவு வம்பா?" எனக் கோபத்துடன் பேசினான்.

ராஜம் சிரித்துக்கொண்டு, "அதாண்டா திருவாய் சங்கீத மழையாகப் பொழிகிறதோ" என்றான்.

"என்னமோப்பா! எங்களுக்கென்ன. ஊரெல்லாம் ஒரே வம்பு! நீ அங்கேயே கிடக்கிறாய்! வீட்டுக்கே வரதில்லை என்று சொன்னார்கள்! அத்தை பெண்ணாகத்தானிருக்கட்டும் வேறு யாராகத்தான் இருக்கட்டும்.கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்? எங்களுக்கென்ன ஆக வேண்டியது?" என்றார் சின்னண்ணா.

"அடடா! ஆட்டத்தைக் கவனிக்காமல் பேச்சு ஸ்வாரஸ்யத்தில் இன்று கணேசன் கழுதையாகித் தன் பேரை ஸ்தாபித்துக் கொண்டான். ஹூம். நடக்கட்டும்" என்றான் ராஜம். எல்லோரும் கழுதைபோல் கத்தலானார்கள். ஊரே கிடுகிடுத்துப் போய்விட்டது. என்னே மதியீனம்! அவர்களுக்கு இப்பாத கண்டத்தை யார் ஆண்டாலும் கவலை கிடையாது. குழந்தை குட்டி, மனைவி மக்கள் அதைப்பற்றிய சிந்தனையும் கிடையாது. அடடா! சீட்டாட்டத்தின் பித்தம் தலைக்கேறிவிடில், இந்த வார்த்தை பேசலாம், கூடாது என்ற சங்கோசமன்னியில் பேசித்தீர்ப்பார்கள். அவர்கள் காதில் பட்ட எந்த சமாசாரமும் நாக்கில் நரம்பில்லாமல் பேசப்படும். நல்வழியிலோ தீயவழியிலோ சம்பாதித்த காசு யாவும் ஒரே வினாடியில் தொலைந்து விடும்.

எல்லா விவகாரங்களுக்கும், ஓர் சட்டமும், சம்பிரதாயமும் கொண்டுவரும் நம்முடையவர்கள் இதை ஒழிக்க ஓர் வழியும் கொண்டுவரப் போவதாகத் தெரியவில்லை.

மதுவைக் காட்டிலும் வெறியைக் கொடுக்கிறது இந்த சீட்டாட்டத்தின் வெறி! ஹிந்தி எதிர்ப்புக்காரர்களைப் போல் "வாழ்க பாரத பூமி. வீழ்க திண்ணைக் கச்சேரி" என ஒரு கூக்குரல் போட்டால் தேவலைபோல் தோன்றுகின்றது!

---

(18-ம் பக்கத் தொடர்ச்சி)

"இன்று காலையில் அவனை—அவள் புருஷனைப் பார்த்துவிட்டேன்! எனக்கு இந்த உலகம் இருளடைந்ததாய் விட்டது. நான் இருப்பதைவிட இறப்பது மேல்" என்று கண்ணீர் உதிர்த்து யழுதாள்.

வெளியிலுட்கார்ந்திருந்த எனக்கு இந்தப் பூமி சுற்றுவதுபோல் தெரிகிறது! கண்முன் என்னெல்லாமோ தோன்றின. நேராக வீட்டிற்கு வந்தேன். வழி நெடுக "மகராஜி, ஒருபிடி அரிசி! பட முடியாதினி" என்ற சொற்களே என் உள்ளத்திற் பிரதி பலித்தன.

அன்று இரவு முழுவதும் எனக்கு ஜுரம் 103 டிகிரி!

# "வந்தே மாதரம்"

'ரவி'

ஹரிஹரன் சென்னையில் வெகுநாட்களாய் வசித்து வருபவன். தினந்தோறும் அவன் கடற்கரைக்குப் போவது வழக்கம். அங்கு இயற்கை யன்னையின் அழகு எவ்வளவு வசிகரமாகத் தாண்டவமாடுகிறது பாருங்கள்! கடலும் வானமும் இடைவிடாது முத்தமிட்டுக் கொண்டிருப்பது கண்ணுக்கெட்டின தூரமட்டில்! அலைகளின் பேரிரைச்சல் ஒரு புறம்! பேதை மாந்தரின் அறியாமையை ஏளனம் செய்வதேபோல் நக்ஷத்திரங்கள் செய்யும் மௌனப் பிரசங்கம் மற்ருெரு புறம். இவைகளை யெல்லாம் கண்ணாரக் கண்டு களித்து எல்லையில்லாமல் பெருகும் ஓர்வித உணர்ச்சியினுல் மெய்ம்மறந்து விடுவது அவனுக்குச் சகஜம்.

அவனுடன் படித்த நண்பர்களெல்லோரும் அவனை ஒரு குட்டி வேதாந்தியென்றே கூப்பிடுவார்கள். ஏனெனில், அவன் தான் சம்சார வலைக்குள் சிக்கிக் கொள்ளாமல் ராமகிருஷ்ண மடத்தில் சேரப்போவதாக அடிக்கடி சொல்வதுண்டு. தவிர, வெறும் வாய் வேதாந்தியாக மட்டு மிருக்காமல் அவன் சில நல்ல நல்ல புஸ்தகங்களைப் படித்து, விஷயங்களைக் கிரகித்துக்கொண்டு, "கண்ணன் காட்டிய வழியே" கம்பீரமாகப் போய்க் கொண்டிருந்தான். ஆனுல் நாம் நினைக்கிறபடியே எல்லாம் நடந்து விடுகிறதா? கடைசியாக நம் கதா நாயகனும் தன் தாயாரின் தொந்தரவை மீற முடியாமல் கல்யாணம் செய்து கொள்ளும்படி நேர்ந்தது. அவ்வளவுதான்! அவன் சிநேகிதர்களனைவரும் அவனைக் கண்ட விடத்திலெல்லாம் பரிகாசம் செய்யத் தொடங்கி விட்டனர். ஆனுல் அவன் மாத்திரம் கம்பன் காளிதாசன் முதலியோரது சிருங்கார ரசம் பொருந்திய இலக்கியச் சுவைகளைச் சலிப்பின்றி அள்ளிப் பருகி அநுபவிப்பவனுகையால், இதுவும் ஒரு நன்மைக்கே என்றும், திருவள்ளுவரது லக்ஷியத்தைப் பின் பற்றவே இவ்விதம் நடந்திருக்கிறதென்றும் தன் மனதைத் தேற்றிக் கொள்வான்.

பரஸ்பர மன ஒற்றுமையுடன் மிக மிக அன்னியோன்னியமாய் வாழும் தம்பதிக்கு ஓர் சிறந்த எடுத்துக் காட்டாக நம் ஹரிஹரனையும் பங்கஜத்தையுமே சிறிதும் சங்கையின்றிக் கூறலாம். அன்பு மயமாய், கரை கடந்து ததும்பும் தெய்வீகக் காதலுக்கு அணிகலமாக விளங்கினுர்கள். அவர்கள் நறுமணமுள்ள அழகான புஷ்பம் இனிய கனியைத் தருவதேபோல நாளடைவில் ஒரு பெண் குழந்தையை ஈன்றனர். குழந்தை கமலமும் சமத்தும் சாதுர்யமுமாய், நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வரலானுள். இப்பொழுதெல்லாம் இவர்கள் மூவரும் சமுத்திரக்கரைக்குப் போய், அங்கு உல்லாசமாய்ச் சம்பாஷித்துக்கொண்டும், குழந்தையின் களங்கமற்ற மழலைச் சொல்லைக் கேட்டுக்கொண்டும் பொழுதை இனிதே கழிப்பார்கள். இத்துடன் பூர்ண சந்திரனும் சேர்ந்துவிட்டாலோ கேட்கவே வேண்டாம். அன்று வீடு திரும்ப வெகு நேரமாகிவிடும்.

ஒரு நாள் விடியற்காலை. வேதியர் வேத மோதும் வேளை. யோகம் பயிலுவோர் பரமாத்ம ஸ்வரூபத்தி லீடுபட்டு—ஜீவம் பிரஹ்ம ஐக்யமாய்—சமாதி கூடும் சமயம். எங்கும் ஒரே வெளிச்சம் ஜகஜ்ஜோதியாக வீசுகிறது. கனவா நனவா என்றே ஒன்றும் தெரியாமல் திகைத்துவிட்டான் ஹரிஹரன்! எங்கு பார்த்தாலும் ஒரே ஜோதி மயம். முதலில் சற்றே பீதியடைந்தவனைப்போல் காணப்பட்டாலும்

சிறிது நேரத்திற்கெல்லாம் சமாளித்துக் கொண்டான். "கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்" என்பதற் கிணங்க அதிக வியப்புடன் உற்றுக் கவனிக்க லானான். ஏதோ ஒரு உருவம் தன்னை நோக்கி வருவதுபோலத் தெரிந்தது. ஒரு வேளை, தான் அதை யணுகுகிறானா என் பதும் அவனுக்குச் சந்தேகமாகிவிட்டது. புன்னகை புரிந்து அவ்வுருவம் சமீபித்ததும் "அம்பிகே, தாயே, பராசக்தி, உன் மாயா லீலைகள் ஒன்றுமே எனக்குத் தெரியவில்லை உனது பாதார விந்தமே சரணாகதி" என்று மனதில் நினைத்துக் கொண்டு சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான் அந்த நிலையில், பிரக்ஞையின்றி, எவ்வளவு நேரம் இருந்தான் என்று சொல்வது சாத்தியமில்லை.

நிற்க. பங்கஜமும் இதே விதியில்தான் இருந்தாள். இணையில்லா ஜோதி வெளியில் சுகந்தம் நிறைந்த காற்று ஜில்ஜில் லென்று வீசுவது அவளுக்குப் புலப்பட்டது. ஏதோ ஒரு அரிய சக்தி எங்கேயோ அவளை அதிவேகமாக இழுத்துச் செல்வதும் தெரிந்தது. போகிறாள், போகிறாள், வெகுதூரம் போய்க்கொண்டே யிருக்கிறாள். கண்ணைக்கட்டிக் காட்டில் விட்டது போல் இவளுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. பிறகு கண நேரத்திற்குள் தான் சதா வழிபடும், தன் நடமாடும் கடவுளாகிய ஹரிஹரனே எதிரில் தென்படுகிறான். அவன் இவளை அணைத்துக்கொள்கிறான்.

உப்பினாலான பொம்மை சமுத்திரத்தில் கரைவதேபோல் கரைந்துவிடுகிறாள். சொல்லொணாததொரு இன்ப உணர்ச்சி மாத்திரம் ஏற்படுகிறது. அங்கு எவரையும் காணோம். ஹரிஹரனையும் காணவில்லை. தன்னுடைய ஸ்தூல தேகமும் இருப்பதாகத் தெரியவில்லை. விவரிக்க முடியாததும், கேவலம், அதிசூக்ஷ்மமான அநுபவ மூலமே உணரக்கூடியதுமான ஒப்பற்ற ஆனந்தம் ஒன்றே எஞ்சி நிற்பது. இவ்வித துரியாவஸ்தையில் எவ்வளவு நாழி யிருந்தாள் என்று சொல்வது சற்றே சிரமம்தான். இதெல்லாம் காலங்கடந்தவையாயிற்றே. கால வரம்பிற்குள் கட்டுப்படுமோ?

'அப்பா' 'அப்பா' என்று கமலம் அலறும் சப்தம் கேட்டு இருவரும் விழித்தனர். உடனே பங்கஜம் குழந்தையை வாரியணைத்து; "ஏங்கண்ணே அப்படி கத்தினே? ஏதாவது கெனா கினா கண்டு பயந்தூட்டயா?" என்று கேட்டாள். அதற்கு கமலம் "இல்லேம்மா. பீச்சிலே யிருந்தேம்மா, யாரோ ஒரு தாதா தாடி வச்சுண்டு கிட்டக்க வந்து, 'கண்ணை மூடிண்டு, 'வந்தே மாதரம்' னு சொல்லு கல்கண்டு தரேன்னு சொன்னா. நான் அப்படியே செஞ்சேன். ஆனா கல்கண்டைக் காணமேன்னு கண்ணைத் திறந்தா அங்கே யாரோ ஒரு அம்மாமி தாம்மா இருந்தா அழுதுண்டு! அவளுக்கு கைலே கால்லே யெல்லாம் வெலங்கிருந்தது! யாராரோ அந்த சங்கிலி யெல்லாத்தையும் அறுத்துண்டு இருந்தா!'வந்தே மாதரம், வந்தேமாதரம்'ன்னு கத்தினா! அப்பாவையும் அங்கே பார்த்தேன். உடனே ஓரே ஓட்டமாய் 'அப்பா அப்பா'ன்னு கத்திண்டே ஓடினேன். நீவந்து தடுத்தூட்டேம்மா! அந்த அம்மாமி யாரம்மா? ஏன் அவளுக்கு வெலங்கு போட்டிருக்கு? யார் போட்டா? வாயேன், நாம்பளும் போய் அதை அறுக்கலாம்" என்று ஒரே மூச்சில் தன் மழலைச் சொற்களால் விஷயத்தை விளங்கவைத்தாள்.

பங்கஜம் குழந்தையைக் கட்டி உச்சி முகர்ந்தாள். ஹரிஹரன் இருவரையும் சேர்ந்து அன்புடன் ஆலிங்கனம் செய்தான். இரண்டு பேரும் இனி தேச சேவையில் ஈடுபட்டு எவருக்கும் பின் வாங்காது முன்னணியிலேயே நிற்க வேண்டுமென பிரதிக்ஞை பண்ணினார்கள்.

இதற்குள், கதிரவனே தன் செவ்விய கிரணங்களை மட்டு மிதமின்றி வாரி இறைத்துக்கொண்டு, நீர் நிலைகளிலுள்ள தாமரை மொட்டுகளை மலர்ப்பித்த வண்ணம் வெகு தூரம் வந்துவிட்டான்!

# சென்னை பிராட்வே டாக்கீஸில்

மகத்தான ஆரம்ப தேதியை எதிர்பாருங்கள்.

# பாண்டுரங்கன்

அல்லது

# ஜெ ஜெ விட்டல்




- இந்திரன் மமதை
- பண்டரீபுர மகிமை
- புண்டரீகன் மதனலீலை
- ஜக்காவின் கொடூரம்

முதலியவற்றை ஒருங்கே சித்தரிக்கும்.

✻

முக்கிய நடிகர்கள்.

மஹாராஜபுரம்
R. கிருஷ்ணமூர்த்தி
வித்வான் ஸ்ரீனிவாசன்
காவி. என். ரத்தினம்
பி. எஸ். சிவபாக்கியம்
கோல்டன். சாரதாம்பாள்
எம். எஸ். ஸரோஜா

மற்றும் பலர்.

ஓர் அருமையான தமிழ் புராணப் படம்

**ஸ்ரீமதி T. A. மதுரம் கதா நாயகியாய் நடிக்கும் முதல் படம் இதுவே.**

பாண்டுரங்காவின் இனிய பாடல்களை 'ஓடியன்' ரிகார்டுகளில் கேளுங்கள்.

விவரங்களுக்கு :

## வேல் முருகன் பிலிம் சர்வீஸ்

**128, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, ஜி. டி., மதராஸ்.**

# மளிகைக்கடை மாணிக்கம் செட்டி

(ஜி. பாலசுப்பிரமண்யம்)

## அத்தியாயம் 5.

**மாணிக்கம் செட்டியார்** :—“ இப்போது தான் தங்களுடன் என் சொந்த விஷயம் ஒன்று கலந்துகொள்ள வேண்டுமென்று, சொல்லிக்கொண்டே இருந்தேன், சொல்லி முடித்தேன் ! தாங்களும் வந்து விட்டீர்கள் ”

**இராமலிங்க அய்யர்** :—“ எப்போதும் தாங்கள் என்னால் ஏதாவது காரியம் ஆக வேண்டுமானால் சொல்லியனுப்பலாம். சாயந்திரங்களில் எனக்கு எப்போதும் ஓய்வு நேரம் தான் ”

**மாணிக்கம் செட்டியார்** :—“ எனக்கு இப்போது சொந்தப் பணம் கொஞ்சம் கையில் சேர்ந்திருக்கிறது. தங்கள் மருமகன் ராமுடு எனக்கு இங்கு வந்ததுமுதல் பாங்க் வரவு செலவுகளைப் பற்றியும் நமக்கு பாங்கினால் உண்டாகும் சௌகரியங்களைப் பற்றியும் சொல்லிக்கொண்டே இருக்கிறான், என் சொந்தமுறையில் ஓர் கணக்கு பாங்கில் திறந்துகொண்டு கையிருப்புத் தொகையை அதில் போட்டுக்கொள்ளலாமா வென்று யோசித்துக்கொண்டிருக்கிறேன். இதைப் பற்றித்தான் தங்களைக் கலக்கவேண்டுமென்று ஆவல் கொண்டிருக்கிறேன், நான் போடுவதானால் எப்படிப் போடலாம்? என்ன வட்டி கிடைக்கும்? எனக்கு விவரங்கள் தெரிவிக்கிறீர்களா ?” என்று கேட்டார்.

**இராமலிங்க அய்யர்** :—“ இரண்டு மூன்று நாட்களாய் ராமுடு ஏதோ பாங்க் விஷயங்களெல்லாம் தங்களுக்குச் சொன்னான் என்றீர்களே. இப்போது என்னைக் கலக்க என்ன காரணம் ?”

**மாணிக்கம் செட்டியார்** :—அவன் வியாபார சம்மந்தமாயுள்ள “ பில் டிஸ்கௌண்ட்” செய்கிறது ; செக் கிராஸ் செய்யும் முறை ; வெளியூர்களுக்கு உண்டியல்கள் வாங்குகிறது—இவைகளை எல்லாம் பற்றிச் சொன்னான். என் சொந்த விஷயம் நான் தங்களைக் கலந்துகொள்ள வேண்டுமென்று நினைத்துக் கொண்டேனே தவிர இவர்களை ஒன்றும் கேட்கவில்லை. என் மகன் ஏதோ புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் படித்துவிட்டு எல்லாம் தெரிந்ததாக பாவித்திருக்கிறான். அவன் கேவலம் எட்டுச் சுரைக்காயாகவே இருக்கலாம். ராமுடுவுக்கு அநுபவம் போராது என்பது என் அபிப்பிராயம். அதனால்தான் நான் தங்களைக் கேட்கவிரும்பினேன்.

**இராமலிங்கய்யர்** :—புஸ்தகங்களைக் கொண்டும் பத்திரிகைகளைக் கொண்டும் வெகு விஷயம் கற்றுக்கொள்ளலாம். தாங்கள் அதை அவ்வளவு அலக்ஷியமாய் எண்ணலாகாது. இருந்தாலும் பாங்க் சம்மந்தப்பட்டவரையில் எவ்வளவு தூரம் அது சம்மந்தமாய்ப் புத்தகங்கள் மூலம் படித்துத் தெரிந்துகொண்டிருந்தாலும் பாங்கிலேயே இருந்து பாங்க் நடவடிக்கைகளை நேரில் அவ்வப்போது ஒவ்வொரு விஷயத்தையும் தெரிந்துகொள்வதுதான் உசிதம்.

இப்போது தாங்கள் புதிதாகத் திறந்து கொள்ளப்போகும் கணக்கு என்னவிதமான கணக்காக விருக்கலாம் என்று கேட்கிறீர்கள்? தங்களிடமிருக்கும் தொகையைத் தொழிலுக்காகப் பிறகு உபயோகப்படுத்துவதாயிருந்தால் நடைமுதல் கணக்குத்தான் தங்களுக்கு உபயோகமுள்ளது, கையிலிருக்கும் தொகை முழுவதும் பாங்கிலேயே இருக்கலாம். எங்கள் பாங்கியில் நூற்றுக்கு வருஷத்திற்கு ஒரு ரூபாய் வீதம் வட்டி கொடுக்கிறார்கள். இம்பீரியல் பாங்காக விருந்தால் நடைமுதல் கணக்குக்கு வட்டியே கிடையாது. நீங்கள் மனதுக்குக் கவலை யன்னியில் எங்கள் பாங்கிலேயே கணக்கு வைத்துக்கொள்ளலாம். நாளைக் காலையில் அதற்குண்டான பாரங்களை அனுப்பச் செய்கிறேன்.

**மாணிக்கம் செட்டியார்** :—என்ன ! வட்டி நூற்றுக்கு ஒரு ரூபாய்தானா? இதென்னய்யா ! மிகவும் குறைவாயிருக்கிறதே. இம்பீரியல் பாங்கியில் வட்டியே கொடுக்கமாட்டார்கள் என்று வேறு சொல்கிறீர்களே. கொடுத்த பணத்துக்கு வட்டியும் இல்லையாம். இப்படி வட்டியே கொடுக்காமல் பணம் நாம் போட்டு, பிறகு அவர்கள் ஏதேதோ சௌகரியங்கள் செய்துகொடுப்பதாகச் சொல்கிறீர்களே, என் மனம் சமாதானப்படாது போலிருக்கிறதே,



4

இராமலிங்க அய்யர் :—நான் ஏற்கனவே சொல்லியபடி பாங்க் நடவடிக்கைகளில் அனுபவமிருந்தால்தான் அதன் உபயோகம் நன்றாய்த் தெரியவரும். தாங்கள் பெட்டியிலேயே வைத்துக்கொண்டிருக்கும் பணம் குட்டிபோடுகிறதோ? அதற்கென்ன வட்டி கிடைக்கிறது? அந்தப் பணத்தைத் தானே நீங்கள் பாங்கில் நடைமுதல் கணக்கில் போடுகிறீர்கள்! அதற்கு என்னமாய் நீங்கள் வட்டி எதிர்பார்க்கலாம்? எந்த நிமிஷமும் தாங்கள் கேட்டபோது எவ்வளவு தொகையானாலும் பாங்கர்கள் தங்களுக்குக் கொடுக்கத் தயாராயிருக்கிறார்களே! இதற்கு அவர்கள் கையிருப்பிலேயே எவ்வளவு தொகை வைத்துக்கொண்டிருக்கவேண்டுமென்று யோசித்துப் பாருங்கள். அதற்கு அவர்கள் அப்படி வட்டி கொடுக்கிறதில்லை, நாங்கள் தங்களைப் போலுள்ள வியாபாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் பாங்க் பழக்கம் ஏற்படும்படி செய்ய வேண்டுமாறு கொஞ்சம் வட்டி போட்டுக் கொடுக்கிறோம்.

இவ்விஷயத்தைத் தாங்கள் நன்றாய் உணரவேண்டுமென்பதுதான் என் கருத்து. தாங்கள் யாருக்குப் பணம் கொடுப்பதானாலும் அந்தத் தொகைக்கு பாங்க் செக்காகவே கொடுத்துவிட்டால் அந்தச் செக்குகள் தங்களுக்கு ரசீதுகளாவிருக்கும். வாங்கின பணத்தை இல்லை என்று ஒருவரும் சொல்லமுடியாது, தாங்கள் தங்களுடைய சொந்தக் கணக்கில் அதைக் குறிக்க மறந்துவிட்டாலும் பாங்க் கைச்சாத்துப் புஸ்தகத்தைப் பார்த்தால் அதிலிருந்து செக் கொடுத்த விவரம் தெரிந்துகொள்ளலாம். கொஞ்சம் தாக்ஷண்யப்பட்டவர்களிடம் ஏதாவது தொகை கொடுக்கவேண்டுமானால் செக்காகவே கொடுக்கிறது உசிதம். பணமாகக் கொடுத்துவிட்டு அதற்கு அவரை உடனே ரசீது எழுதிக் கொடுக்கும்படி கேட்கிறது அலௌகிகமாக எண்ணப்படும். செக் கொடுத்தால் அவரிடம் ரசீது தேவையில்லை. கௌரவமாகவே இருக்கும். இவைகளைத் தவிர தங்களுக்குக் கையில் பணத்தை வைத்துக்கொள்ளும் சிரமமும் அதைக் காப்பாற்ற வேண்டுமென்ற கவலையும் இருக்காது. இந்த சௌகரியங்களைக் கொஞ்சம் தீர்க்கமாய் யோசித்துப் பார்த்தால் தாங்கள் வட்டிக்கே ஆசைப்படமாட்டீர்கள்"

மாணிக்கம் செட்டியார் :—நாளை தினம் என்னிடம் சேர்ந்திருக்கும் தொகையைக் கொண்டு வந்துவிடுகிறேன். நாளை குருவாரமாக விருக்கிறது. தாங்கள் சொன்னபடி பாங்கு மனு பாரங்களை அனுப்பும்படி சொல்லியனுப்பினால் அவைகளைப் பூர்த்திசெய்து பணத்துடன் பாங்குக்கு அனுப்பிக் கணக்குத் திறந்துகொண்டுவிடுகிறேன். ஆனால் இன்னொரு விஷயம். நான் ஊரில் ஓர் சத்திரம் கட்டியிருக்கிறேனே, அதற்காகவென்று கொஞ்சம் நிலம் வாங்கி வைக்கலாமென்று ஒரு தொகை சேர்த்து ஒரு வருஷமாய் வைத்திருக்கிறேன். அதற்கு எனக்கு திருப்திகரமாய் நிலம் ஒன்றும் அகப்படவில்லை.

இராமலிங்க அய்யர் :—"செட்டியார்வாள், தர்மத்துக்காகவென்று நிலத்தை எழுதி வைத்து அதன் வரும்படியைக் கொண்டு தருமம் நடத்தவேண்டுமென்று ஏற்பட்டிருக்கிற விடங்களிலெல்லாம் அவர்கள் எதிர்பார்த்தபடி நிரந்தரமாய் வரும்படி வராமல் ஒழுங்காய் தருமம் நடத்த முடியாமலிருக்கிறது. என் அனுபவத்தில் இம்மாதிரி அனேகம் தருமம் நடத்தக்கூடாமலிருக்கிற விஷயம் எனக்கு நன்றாய்த் தெரியும். ஆகையால் ஒழுங்காய் தருமம் நடக்க வேண்டுமானால் நிலத்தில் போடுவது உசிதமல்ல. நிலக்காரர் தானே நேரில் சாகுபடி பண்ணி, கண்டு முதல் செய்தாலொழிய நிலத்தின் வரும்படி நாம்முழுவ அடைவது மிகவும் துர்லபம், பாங்குகளில் நீண்ட ஓர் குறிப்பிட்ட காலத்துக்கு பணத்தை நிர்ணயத்தவணை டிபாசிட்டாகப் போட்டு விட்டால் ஆறு மாதத்திற்கொரு முறை நிரந்தரமாய் வட்டி கிடைத்துவிடும். அந்த வட்டியைக்கொண்டு தர்ம காரியத்தை ஒழுங்காய் நடத்திவரலாம். நாம் போடுகிற பாங்கின் நிலைமையைப்பற்றி மாத்திரம் நாம் நன்றாகத் தெரிந்துகொண்டு பிறகு டிபாசிட் செய்யவேண்டும். நிலத்தில் நாமே நேரிலிருந்து பாடுபட்டுக் கண்டு முதல் செய்தால் நாம் அதில் போட்ட முதலுக்கு எவ்வளவு வீதம் வரும்படி கிடைக்குமோ அதைவிடக் கொஞ்சம் மேலாகவே பாங்கில் போட்ட டிபாசிட்டுகளுக்கு வட்டிகிடைக்கும். நிலத்தில் நாம் படும் சிரமம் இதில் என்றும் கிடையாது, ஒவ்வொரு சந்தர்ப்பங்களில் நாம் பட்ட சிரமமானது கூட வேளாவேளையில் மழையில்லாமைபற்றியோ, அல்லது வெள்ளத்தினாலோ, நாம் எதிர்பார்த்தபடி கண்டு முதல் செய்ய முடியாமல் போய்விடுகிற விஷயம் நம் அனுபோகத்தில் நன்றாம் தெரியும். அந்தமாதிரி பாங்க் டிபாசிட்டுகளைப்பற்றி நாம் பயப்பட வேண்டியதில்லை. ஆறுமாதத்திற்கொருமுறை வட்டியை பாங்கர்களே நாம்குறிப்பிட்ட விஷ

யத்துக்கு அனுப்பிவிடுவார்கள். நான் இவ்வூர்ப் பள்ளிக்கூடத்திற்குக் காரியதரிசி. பள்ளிக்கூடத்தின் பணம் முழுவதும் நான் டைரெக்டராயிருக்கும் பாங்கிலேதான் போடப்பட்டிருக்கிறது. அவ்வப்போது பிள்ளைகளிடம் வாங்கும் சம்பளம் சர்க்கார் கிராண்டு இவைகளெல்லாம் நடைமுதல் கணக்கில் போடப்பட்டு, உபாத்தியாயர் சம்பளம் மற்ற சில்லரைச் செலவுகள் முதலியவற்றுக்கு செக் மூலமாய் வேண்டியபோதெல்லாம் தொகை வாங்கிக் கொள்வோம்.

சில பிள்ளைகளுக்குச் சம்பளம் கொடுப்பதற்காக வேண்டி சிலர் தர்மமாக முதல் கொடுத்திருக்கிறார்கள். அம்முதலை நீண்டகால நிர்ணயத்தவணை டிபாசிட்டாகப் போட்டிருக்கிறோம், அதில் கிடைக்கும் வட்டியை வாங்கிக் குறிப்பிட்ட பையன்களுக்கு பள்ளிக்கூடச் சம்பளம் கொடுக்கிறோம். நிலத்தின் வரும்படியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தோமானால் எங்களுக்கு இவ்வளவு ஒழுங்காகச் சம்பளம் கட்டமுடியாது.

---

உங்களுக்கோர் முத்து மாலை!

**பாரத மணி**யின் முதல் 25 முத்துக்கள் கோர்க்கப் பட்டு பைண்ட் வால்யூமாகத் தயாராகி விட்டது.

**இரண்டே ரூபாய்தான்**

உங்கள் பிரதிக்கு உடனே எழுதுங்கள் ;—

பாரத மணி கார்யாலயம்

312, தம்புசெட்டி தெரு, ஜி.டி. சென்னை.

லைப் அஷ்யூரன்ஸுக்கு :

**நியூ கார்டியன் ஆப் இந்தியா லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.**


மதராஸ்.

இக்கம்பெனி புதிய இன்ஷ்யூரன்ஸ் சட்டத்தின் விதிப்படி எல்லாக் கம்பெனிகளுக்கும் விதித்துள்ள தொகையான 2-லக்ஷம் ரூபாய்த் தொகையை முன்பே அடைந்திருக்கிறது.

இக்கம்பெனி எல்லோருடைய விருப்பங்களையும் பூர்த்திசெய்யும் திட்டங்களுடன் கூடியது. இதன் பாலிஸி நிபந்தனைகள் எல்லோருக்கும் உகந்தது.

அஷ்யூரன்ஸைப் பற்றியாவது, ஏஜென்ஸி நிபந்தனைகளையாவது தெரிந்துகொள்ள வேண்டுமானால் தலைமை ஆபீஸுக்காவது, ஜில்லா அல்லது இன்ஸ்பெக்டர் ஆபீஸ்களுக்காவது எழுதிக் கேட்டுக் கொள்ளலாம்.

தலைமை ஆபீஸ் **என். நாராயணன்**
மவுண்ட்ரோடு, மதராஸ். மானேஜர்.




# சந்திரன் சொக்காய்

வேலு

ஒரு நாள் சந்திரன் தன் அம்மாவிடம் போனான்; "அம்மா, அம்மா, எனக்குக் குளிர் பொறுக்க முடியவே இல்லை. எனக்கு ஒரு சொக்காய் தைத்துத்தர மாட்டாயா?" என்று கேட்டான், "என் கண்ணே நாளைக்குக் கடைக்குப் போய் நான் பட்டுத்துணி வாங்கிச் சொக்காய் தைத்துத் தருகிறேன்; நீ போய் விளையாடு" என்றாள். சந்திரன் நட்சத்திரங்களோடும் மேகங்களோடும் விளையாடப் போய் விட்டான்.

* * *

சந்திரனுடைய அம்மா கடைக்குப் போனாள். அழகான பட்டு வாங்கினாள். அதை அவள் அளவாக வெட்டி அழகான சொக்காய் தைத்தாள். சந்திரனைக் கூப்பிட்டு அவனுக்கு அந்தச் சொக்காயைப் போட்டாள். அப்போது அவனுக்கு உண்டான சந்தோஷத்தைச் சொல்ல முடியாது. அவன் அதைப் போட்டுக்கொண்டு ஆகாயம் எங்கும் ஓடி ஓடித் திரிந்து; சிரித்துச் சிரித்து விளையாடினான்.

* * *

மறுநாள் அவன் த்ன் தாயாரிடம் வந்து, "அம்மா, அம்மா, என் சொக்காயைப்பார். இது கிழிந்து விட்டது. வேறொரு சொக்காய் தைத்துத்தா" என்று கேட்டான். சந்திரனுடைய தாயார் ஆகட்டும் என்று மறுபடியும் கடைக்குப் போனாள். அழகான பட்டு வாங்கினாள். அதை அவள் அளவாக வெட்டி அழகான சொக்காய் தைத்தாள். சந்திரன் அந்தச் சொக்காயைப் போட்டுக் கொண்டான். ஆனால் அது மறுநாள் சிறியதாய் விட்டது.

* * *

சந்திரன் தன் அம்மாவிடம் போய், "இன்னும் ஒரு சொக்காய் தைத்துத் தரவேண்டும்" என்று கேட்டான். அவனுடைய மாதா வேறொரு சட்டை தைத்துக் கொடுத்தாள். ஆனால் அதுவும் அடுத்த நாள் சிறியதாய் விட்டது.

சந்திரனுடைய தாய் இப்படியே பதினாலு சொக்காய்கள் தைத்தாள். ஆனாலும் ஒரு நாள் தைத்த சொக்காய் மறுநாள் சந்திரனுக்குச் சரியாய் இருக்கவில்லை. முடிவில் அவள் வட்டமான பெரிய சொக்காய் ஒன்று தைத்துக் கொடுத்தாள். அந்தச் சொக்காயோ மறுநாள் பெரியதாய்விட்டது.

* * *

தாத்தாவின் சொக்காய்போல, "தொள தொள" என்றாய்விட்டது. அதைக் கண்ட சந்திரன் அழுதுகொண்டே அம்மாவிடம்

வந்து, "ஏன் அம்மா இப்படிச் சொக்காய் தைத்துவிட்டாய்? என்றான். அதற்கு அவள் அப்பா நீதான் வளர்ந்துகொண்டு வருகிறாயே! அதனால்தான் இப்படி தைத்தேன் என்றாள். இதைக்கேட்ட சந்திரன் இனிமேல் நீ எனக்குச் சொக்காய் தைக்கவேண்டாம். எனக்குச் சொக்காயேவேண்டாம். நான் குளிரில் நடுங்கிக்கொண்டே இருக்கிறேன்." என்று கோபித்துக்கொண்டே போய்விட்டான்.

அந்த நாள்முதல் இந்தநாள் வரையிலும் சந்திரன் சொக்காய் போட்டுக்கொள்கிறதே இல்லை. அவனுடைய அம்மாவும் அவனுக்குச் சொக்காய் தைப்பதை நிறுத்தி விட்டாள். யாராவது அவனுக்குச் சரியாய் இருக்கும்படி ஒரு சொக்காய் தைத்துக்கொடுத்தால் அவன் போட்டுக்கொள்வான். நீ தைத்துக் கொடுக்கிறாயா?

---


## பரசுராம சித்த ஔஷதாச்ரமம்

திருவண்ணாமலை (N. A. Dt.)

நீடித்த வியாதிகளை, முப்பு குருவால் செய்த ஔஷதங்களால் நிவர்த்தி செய்யப்படும். டியூபர்குலோஸிஸ் என்ற க்ஷய ரோகத்திற்கும், நீரழிவு ரோகத்திற்கும் விசேஷ ஔஷதங்கள் இருக்கின்றன.

### முப்புகுரு சேர்ந்த "சித்த எண்ணெய்"

இது சர்வரோக நிவாரணி, பரம சஞ்சீவி. ஒரு தடவை உபயோகித்தால் இதன் பெருமை தெரியும். அனேக டாக்டர்களால் பரிசீலனை செய்யப்பெற்றது. குழந்தைகள் பால் கட்டிகளுக்கும், ஈரல் கட்டிகளுக்கும் நிகரற்ற ஔஷதம்.

ஸோல் டிஸ்டிரிபியூடர்கள் :

**ஸாரதா ஸ்டோர்ஸ், காரைக்குடி.**

ஸ்டாக்கிஸ்ட்ஸ் :

அப்பா அண்டு கம்பெனி, மதறாஸ்.

T. N. நாகலிங்கம் பிள்ளை, மதுரை.

மீனுக்ஷி ஸ்டோர்ஸ், தேவகோட்டை.

T. N. சொக்கலிங்கம் பிள்ளை, அண்டு சன்ஸ், மதுரை.




# ரஷ்யாவின் பாதுகாப்பு

சென்ற இருபது வருஷ காலமாகத் தன் எல்லைப் பாதுகாப்புகளைச் செவ்வனே சீர் திருத்திக் கொண்டிருக்கும் ரஷ்யா, தற்காலம், இவ்வுலகில் ஓர் முதன்மையான தேசமாக இருக்கிறதென்பதில் சற்றேனும் ஐயமில்லை. ரஷ்யா எச்சமயத்திலும் யுத்தத்திற்கு வேண்டிய ஆயத்தங்களுடன் தயாராயிருக்கிறது என்பது மட்டும் தெரியவருகின்றது.

வார்ஸாவிலிருந்து மாஸ்கோ செல்லும் புகைவண்டியில் ஏறி உட்கார்ந்தால் மின்விக் என்ற ஊருக்கு வருவதற்கு முன், ரயில் பாதைக்கு இருபுறமும் கண்ணுக்கெட்டிய தூரம் பரவியிருக்கும் முள்வேலிகளைக் காண்கிறோம். இவைகள் போலந்தை ரஷ்யாவிலிருந்து பிரிக்கும் எல்லைகள். இத்தகைய எல்லை கருங்கடற் கரையிலிருந்து ஜன சஞ்சாரம் இல்லாத பொட்டை வெளிகளில் ஊடுருவிச் சென்று வடக்கே பால்டிக் கடல் வரை வியாபித்திருக்கிறது. மத்தியில் ஆங்காங்கு கோட்டைகள் கட்டப்பட்டு சேனைகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. பிரான்ஸுக்கு மாஜினோ லைன் எப்படியோ, ஜெர்மனிக்கு ஸீக்ப்ரீட் லைன் எப்படியோ—அதேமாதிரி ரஷ்யாவிற்கு மேலைக்கோடியிலிருக்கும் எல்லை உபயோகப்படுகிறது.

ரஷ்யாவின் கிழக்குக்கோடி பாகத்தைப் பார்க்குங்கால் இவ்வளவு பிரமாதமாக எல்லை ஒன்றும் ஸ்தாபிக்கப்படவில்லை எனத் தெரிகிறது. வ்ளாடிவர்ஸ்டாக், சிடா முதலிய நகரங்களைச் சுற்றி பலத்த கோட்டைகள் கட்டியிருக்கிறார்கள். இதைத்தவிர சில இடங்களில் மட்டும்தான் முள் வேலிகளும் கோட்டைகளும் இருக்கின்றன. ஆனால் இதைவிட அதிகமாய் வேறொன்றும் வேண்டியதில்லை. மேலும் இந்தப் பிரதேசத்தில் இரண்டு பலத்த பட்டாளங்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இதேமாதிரி ரஷ்யாவின் மேற்குப் பாகத்திலும் எல்லைக்குப்பின்புறம் நான்கு பட்டாளங்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. தற்காலம் ரஷ்யாவிலுள்ள சேனைகள் மிகவும் பலத்திருக்கின்றனவென்பதில் சந்தேகமேயில்லை.

ஆனால் பலத்த சேனைகள்வைத்துக் கொண்டிருப்பது மட்டும் போதாது. சேனைகளிலுள்ளவர்களின் வயிற்றுப் பிழைப்பிற்குத் தேவையான உணவுப் பொருள்களும் அத்யாவசியம் என்பது எல்லோரும் அறிந்த விஷயமே. இதை யுத்தேசித்துப் பல விவசாயிகள் ரஷ்யாவின் கிழக்குப் பிரதேசத்தில் குடியேறியிருக்கிறார்கள். அங்குள்ள நிலங்களைச் சாகுபடி செய்து, யுத்த காலத்தில் பட்டாளங்களுக்கு வேண்டிய ஆகாரத்தைச் சேகரித்து வைத்திருக்கிறார்கள். ஆகவே, பத்து வருஷங்களுக்குமுன் வெறும் பொட்டைத் தடலாயிருந்த ரஷ்யாவின் கீழ்ப்பாகத்தில் இப்பொழுது சுயநாட்டிற்காகப் பாடுபட்டு உழைத்துத் தாங்களும் உண்டு சந்தோஷத்தை அடைந்துகொண்டிருக்கும் குடித்தனங்களைப் பார்க்கிறோம்.

ஆகவே ஜப்பானுடன் சண்டைபோட நேரிட்டால் ரஷ்யா எப்பொழுதும் ஆயத்தமாகவே இருக்கிறது. வடகிழக்கு மூலையிலுள்ள காம்சட்கா தீபகற்பத்தில் ஒரு பலத்த ஆகாச விமானப்படையை நிறுத்தியிருக்கிறார்கள். போக்கு வரவு சாதனத்தை யுத்தேசித்து இப்பொழுது இருக்கிற ட்ரான்ஸ்-ஸைபீரியன் ரயில் பாதைக்கு வடக்கில் புதியதாக ஒரு ரயில்பாதை போடப்படுவதாகத் தெரிகிறது. ஆகவே இவ்வளவு வசதிகளை யடைந்திருக்கும் ரஷ்யாவின் கிழக்குப் பாகத்தை அந்நியர்கள், படையெடுத்துக் கைப்பற்றுவதென்பது சுலபமான காரியமல்ல.

(இந்தியன் அபேர்ஸ்).

# சினிமாச் சுருள்

(எஸ். எஸ்.)

பண்டரீபுரத்திலிருந்து, மாமியாரின் துன்புறுத்தலுக்குப் பயந்து ஓடிவந்த சக்குபாயை ராயல் டாக்கிஸோர் நியூடோன், ஸ்டுடியோவில், பிடித்துவைத்திருந்து கூடிய சீக்கிரம், அதாவது இம்மாதக் கடைசிக்குள், வெளிவிடப்போவதாகச் சென்னை மாகாணமெங்கும், ஓர் பலத்த வதந்தி உலாவுகிறது. நாமதேவருடைய விஜயத்தின்பொழுது பண்டரிநாதனுடைய தரிசனம் கிடைத்தது. அதற்குப் பிறகு இதுவரை, ஜயவிட்டலின் அன்பிற்குப் பாத்திரமான பக்தகோடிகள், சாதக பக்ஷிபோல் காத்துக்கொண்டிருப்பதற்கிரங்கி, சக்குபாயுடன் விஜயம் செய்கிறார் போலிருக்கிறது! ஜயவிட்டலுக்கு ஜே!

* * *

வீர ரமணியில் மோட்டார் சைகில் சவாரி செய்த அலுப்போ, என்னமோ, கே. டி. ருக்மணி இது நாள்வரை, ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தார்போலிருக்கிறது. அதைப்பற்றி எனது மூளையும், தீவிர ஆலோசனையில் ஈடுபட்டு தேடாத இடமெல்லாம் தேடி, பிறகு பத்திரிகை விளம்பரத்தின் உதவியைக்கொண்டு, பம்பாய் ஸ்டுடியோ ஒன்றில் ஜெயக்கொடியை நிலைநாட்டுவதற்கான வேலையில் மும்முரமாய் ஈடுபட்டிருப்பதாய்த் தெரிந்து கொண்டேன். அதற்குச் சென்னை தென் இந்திய யுனைடெட் ஆர்டிஸ்ட் கார்ப்பரேஷனர்கள்தான் காரணகர்த்தர்களாம். பலே குஷியாய்த்தானிருக்கும்போலிருக்கு; ஏற்கனவே ஸ்டன்ட் படங்களில் காட்டிய கைச்சரக்கெல்லாவற்றையும் சேர்த்து கே. டி. ஆர். இதில் காட்டுவாரென எதிர்பார்க்கப்படுகிறது. அப்படியானால் தென்னிந்திய யுனைடெட் ஆர்டிஸ்ட் கார்ப்பரேஷனுக்கு "ஜெயக்கொடி" ஓர் வெற்றிக்கொடியை நிலைநாட்டி விடுமென்பதில் சிறிதும் சந்தேகமில்லைதான்.

* * *

கவி காளமேகத்தின் படப்பிடிப்பு அடையார் பிராக்ஜோதி பிக்சர் ஸ்டுடியோவில், வெகு துரிதமாய்ப் பிடிக்கப்பட்டுவருகிறது. கவி காளமேகமாக நடிக்கும், நாதஸ்வர வித்வான் திருவாடுதுறை ஸ்ரீ. ராஜரத்னம் பிள்ளை, கவிகளை கவனம் செய்த வண்ணம் இருக்கிறாராம். எல்லிஸ். ஆர். டங்கன் டைரக்டராகவும், பண்டித பி. எஸ். செட்டியார், அஸிஸ்டெண்டு டைரக்டராகவும் நிற்க நேரமின்றி பம்பரம்போல் சுழன்ற வண்ணமாயிருக்கிறார்களாம். இருப்பதைப் பார்த்தால் மோஹினி பிக்சர்ஸார் மூச்சைப் பிடித்துக்கொண்டு, ஒரேயடியாய் நிற்காமல் ஓட்டமும் நடையுமாய்ப்போய், காளமேக சகிதமாய்த்தான் திரும்புவார்கள்போலிருக்கிறது!

* * *

டிங் டாங் டணங்கென்று பட்டாக்கத்தியின் சப்தங்களும், பேரிகையின் முழக்கமும் கேட்டது. நம் தேசத்தில் துப்பாக்கி பீரங்கி எதுவும் இல்லையே என்று கத்தியுடனும் சூலத்துடனும் போர் செய்யக் கிளம்பி விட்டார்களோ வென்று விசாரிக்குமளவில் உக்கிரசேனன் படைக்கும், கிரேக்கர் படைக்கும் போர் மூண்டதெனத் தெரிந்தது எதில்? "மாத்ரு பூமி"யில் தான்!

* * *

மகாராஜபுரம் கிருஷ்ணமூர்த்தியை, வீர அபிமன்யுவில் சந்தித்த பிறகு, வெகு நாளாக அவருடைய தரிசனம், காணக்கிடைக்காமலிருந்தது. பிறகு, ஓர் மின்னொளி மின்னுவதுபோல், மாயா மச்சீந்திராவில் காட்சியளித்தார். அதன்

நிமித்தம் கல்கத்தா போய்வந்த சிரமமோ என்னமோ கொஞ்சம் விஸ்ராந்தி செய்து கொண்டு, கையில் சப்பளாக்கட்டை சகிதம் பாண்டுரங்கா! பண்டரி நாதா! என்ற கானத்துடன், வேல்பிக்சர் ஸ்டுடியோவில் இச்சமயம் பிரவேசித்துள்ளாராம். கூடிய விரைவில், பக்த கோடிகளிடையே பிரசன்னமாவாரென்ற வதந்தி பலமாய் வீசிக்கொண்டிருக்கிறது. இஃது இவ்வாறிருக்க நெருப்புடன் காற்று சேர்ந்தாற்போல், சினிமாப் புகழ் டி. எ. மதுரமும் சேர்ந்து விட்டாளாம். இதில் இவர் ஓர் பிரைஸ் அடித்து விட்டாரென்றே தான் சொல்லவேண்டும். முன்னெல்லாம் சிறு சிறு பாகங்கள் கிடைத்துவந்த இவருக்கு முதல் முதலாக இதில் பிரதான பாகம் (பாண்டு ரங்கனின் மனைவி) கிடைத்திருப்பதே இவருடைய நடிப்புத் திறமையைச் சீர் தூக்கும் துலாக் கோலாக அமைந்துள்ளது. ஆகையால் மற்ற விஷயங்களைப் பற்றிக் கேட்கவா வேண்டும்?



வேல் முருகன், தமிழ் பாண்டுரங்காவில், பாண்டுரங்கனாக நடிக்கும், M. R. கிருஷ்ணமூர்த்தியும், மாமாவாக நடிக்கும், காளி N. ரத்னமும்